கருநாடக அரசு

# செம்மொழித் தமிழ்

## *CHEMMOZHI THAMIZH*

### முதல் மொழி

பாகம் - *1*

**FIRST LANGUAGE TAMIL**

# 4

**ஆம் வகுப்பு**

**STANDARD**

பயிற்சியுடன் கூடிய பாடப்புத்தகம்

## Text cum Workbook

**Karnataka Text Book Society (R.)**
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

@KTBS
NOT TO BE REPUBLISHED

# Preface

The Textbook Society, Karnataka has been engaged in producing new textbooks according to the new syllabi which in turn are designed on NCF – 2005 since June 2010. Textbooks are prepared in 12 languages; seven of them serve as the media of instruction. From standard 1 to 4 there is the EVS, mathematics and 5th to 10th there are three core subjects namely mathematics, science and social science.

**NCF – 2005 has a number of special features and they are:**

- connecting knowledge to life activities
- learning to shift from rote methods
- enriching the curriculum beyond textbooks
- learning experiences for the construction of knowledge
- making examinations flexible and integrating them with classroom experiences
- caring concerns within the democratic policy of the country
- making education relevant to the present and future needs.
- softening the subject boundaries- integrated knowledge and the joy of learning.
- the child is the constructor of knowledge

The new books are produced based on three fundamental approaches namely.

Constructive approach, Spiral Approach and Integrated approach. The learner is encouraged to think, engage in activities, master skills and competencies. The materials presented in these books are integrated with values. The new books are not examination oriented in their nature. On the other hand they help the learner in the all round development of his/her personality, thus help him/her become a healthy member of a healthy society and a productive citizen of this great country, India.

The most important objectives of teaching language are listening, speaking, reading, writing and reference work. These skills have been given a lot of importance in all the language textbooks. Along with the inculcation of these skills, fundamental grammar, opportunities for learners to appreciate beauty and imbibe universal life values have been integrated in language textbooks. When learners master these competencies, they would stop studying textbooks for the sake of passing examinations. In order to help learners master these competencies, a number of paired and group activities, assignments and project work have been included in the textbooks. It is expected that these activities would help learner master communicative skills. Ultimately, it is expected that students master the art of learning to learn and make use of these competencies in real life.

The Textbook Society expresses grateful thanks to the chairpersons, writers, scrutinisers, artists, staff of DIETs and CTEs and the members of the Editorial Board and printers in helping the Text Book Society in producing these textbooks. A few works of some writers and poets have been included in these textbooks. The textbook society is extremely grateful to them for giving their consent for the inclusion of these pieces in the textbooks.

**Nagendra Kumar**
Managing Director
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

**G S Mudambadithaya**
Coordinator
Curriculum Revision and
Textbook Preparation
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

©KTBS
NOT TO BE REPUBLISHED

## முன்னுரை

மொழி ஒரு வலுவான ஊடகம். ஒருவர் தம் எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்த மொழி மிகவும் தேவையானது. மொழியை அறிந்தவர்களுடன் எளிதில் தொடர்பு கொள்ளமுடியும். தன் சமுதாயத்தில் ஏற்படும் இடர்பாடுகளை அறிந்து அதனைப்புரிந்து கொண்டு தீர்வு காணவும், அறிவு சார்ந்த, இலக்கியம் சார்ந்த நூல்களையும் பாடங்களையும் படித்துப் புரிந்து கொள்ளவும் மொழியே கருவியாக விளங்குகிறது. கற்றலுக்கு மொழியே அடிப்படை.

தற்போதைய பாடத்திட்டம் அமைக்கும்பொழுது மாநில பாடத்திட்டங்கள் 2001-02 மற்றும் என் சி எப் 2005, இவ்விரண்டையும் ஒப்புறழ்வு செய்து மேன்மைப் படுத்தப்பட்டுள்ளது. பாடத்திட்டத்திலுள்ளது. அடிப்படையில் குறைந்த கற்றல் அளவுடன் கூடிய திறன்களை என் சி எப் 2005 பாடத்திட்டத்தினை ஒப்பிட்டு உள்ளுறை சிறந்ததாக்கப் பட்டுள்ளது. பாடத்திட்டம் குழந்தையின் (திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்) திறன் அடிப்படையில் செயல் திறன் மற்றும் தொடர்புப்பணி போன்றவற்றை உள்ளடக்கி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. எளிமையிலிருந்து கடினத்திற்குச்செல்லுமாறு பாடப் பொருள் அமைக்கப்பட்டுள்ளது. தேசியக் கல்வித் திட்டங்கள் 1986ல் குறிப்பிட்டுள்ளபடி குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு பாடத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் படக்கதைகள், வண்ணம்தீட்டுதல், செயல்பாடுகள் மற்றும் பல்வேறு பயிற்சிகளையும் உட்கொண்டுள்ளது. உரையாடல், நாடகம், கடிதம் எழுதுதல் போன்றன சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகள் இயல்பாகப் பேசவும், உரையாடவும் தம் கருத்தை வெளிப்படுத்தவும் உதவும் வண்ணம் பல வாய்ப்புகள் இப்பாடநூலில் அளிக்கப்பட்டுள்ளன. “கற்றல் சுவையாக இருந்தால்தான் கல்வியும் சுவையாக இருக்கும்,” என்பதைக் கருத்தில்கொண்டு “கற்றல் குழந்தைக்குச் சுவையாகத் தோன்றும் வண்ணம்” இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பாட நூல் உரிய நோக்கத்தில் உருவாக்கி இருப்பினும், அதனை வகுப்பறையில் செயல்படுத்திக் கற்பிப்போர் ஆசிரியப் பெருமக்களே! இது உருவாக்கப்பட்டதின் நோக்கத்தையும் எதிர்ப்பார்ப்பையும் நன்குணர்ந்து செயல்படுத்துவீர்கள் என நம்புகிறோம்.

இப்பாடநூல் நன்கு உருவாக ஒத்துழைப்பு அளித்த கருநாடக அரசு கல்வித்துறையினருக்கும், இந்நூலை மேற்பார்வையிட்டு செம்மைப் படுத்திய எங்கள் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் முனைவர் திரு இரா. சீனிவாசன் அவர்களுக்கும், நூலகத்தைப் பயன்படுத்தி நூலின் ஆக்கத்திற்குத் துணை நின்ற பெங்களூர்த் தமிழ்ச்சங்கத்தினருக்கும் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புடன்

**C. இராமமூர்த்தி**

தலைவர் பாடநூற்குழு

மற்றும் குழு உறுப்பினர்கள்

© KTBS NOT TO BE REPUBLISHED

## Text Book Committee

***Chairman :***

**1) Sri.C.Ramamoorthy,** Retired Teacher No.16, Arup nivas, 4th Cross, S.R Layout Murugesh palya, Bengaluru-17

***Members :***

1. **Smt. Vijayalakshmi.R** A.M. BBMP Girls High School. Halasuru Bengaluru-8
2. **Smt. Kulsumbi,** A.M. BBMP Boys High School. Jogupalya Bengaluru-8
3. **Smt. Jyothi.G,** A.M. Govt. Tamil Higher Pry-School Shanthinagar. Bengaluru-88
4. **Smt. Irudaya Mary,** A.M. Govt. Tamil Hr-Pry-School Murphy town Halasuru. Bengaluru-8
5. **Sri. Subramanian,** Artist. Chaitrakala arts Private Ltd Indiranagar. Bengaluru -37

***Scrutinizer :***

**Sri. Dr. R. Srinivasan,** Retired Professor. No.3668, 8th Cross, H.A.L II Stage, 13 'D' Main Indira nagar, Bengaluru-8.

***Chief Co-ordinator :***

**Prof. G.S. Mudambadithaya,** Curriculum Revision and Text Preparation, K.T.B.S., Bengaluru.

***Chief Advisers :***

**Sri Nagendra Kumar,** Managing Director, K.T.B.S(R.), Bengaluru.

**Smt C. Nagamani,** Deputy Director, K.T.B.S(R.), Bengaluru.

***Programme Co-ordinator:***

**Smt. Chandrakala,** A.D.P.I., K.T.B.S(R.), Bengaluru.

@KTBS NOT TO BE REPUBLISHED

# ಪರಿಷ್ಕರಣೆ ಕುರಿತು

ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಬಗ್ಗೆ ಪ್ರಕಟಗೊಂಡ ಸಾರ್ವಜನಿಕ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಗಮನಿಸಿ ಮಾನ್ಯ ಮುಖ್ಯಮಂತ್ರಿಯವರೂ ಅರ್ಥಸಚಿವರೂ ಆಗಿರುವ ಶ್ರೀ ಸಿದ್ದರಾಮಯ್ಯನವರು ತಮ್ಮ 2014-15ರ ಬಜೆಟ್‌ನಲ್ಲಿ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ರಚಿಸುವ ಘೋಷಣೆ ಮಾಡಿದರು. ತಜ್ಞರು ಅನುಸರಿಸಬೇಕಾದ ಮೂಲ ಆಶಯವನ್ನು ಹೀಗೆ ಹೇಳಿದರು: "ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯ, ನೈತಿಕಮೌಲ್ಯಗಳು, ವ್ಯಕ್ತಿತ್ವವಿಕಸನ, ವೈಜ್ಞಾನಿಕ ಮತ್ತು ವೈಚಾರಿಕ ಮನೋಭಾವ, ಜಾತ್ಯತೀತತೆ ಮತ್ತು ರಾಷ್ಟ್ರೀಯ ಬದ್ಧತೆಗಳಿಗೆ ಅನುವಾಗುವಂತೆ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ಪುನರ್ ರಚಿಸಲಾಗುವುದು" - ಇದು ಬಜೆಟ್ ಭಾಷಣದಲ್ಲಿ ಸಾದರಪಡಿಸಿದ ಆಶಯ.

ಆನಂತರ ಶಿಕ್ಷಣ ಇಲಾಖೆಯು ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯವರೆಗಿನ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣೆಗಾಗಿ 27 ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ದಿನಾಂಕ: 24.11.2014 ರಂದು ಆದೇಶಹೊರಡಿಸಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ವಿಷಯವಾರು ಮತ್ತು ತರಗತಿವಾರು ಮಾನದಂಡಕ್ಕನುಗುಣವಾಗಿ ರಚಿತವಾದವು. ವಿವಿಧ ಪಠ್ಯವಿಷಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರು, ಅಧ್ಯಾಪಕರು ಈ ಸಮಿತಿಗಳಲ್ಲಿದ್ದಾರೆ. ಈಗಾಗಲೇ ಲಿಖಿತವಾಗಿ ಬಂದಿರುವ ಅನೇಕ ಆಕ್ಷೇಪಗಳು ಮತ್ತು ವಿಶ್ಲೇಷಣೆಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಿ, ತಪ್ಪು ಒಪ್ಪುಗಳ ಬಗ್ಗೆ ನಿರ್ಣಯಿಸಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ ಹೊಣೆಹೊತ್ತ ಈ ಸಮಿತಿಗಳಿಗೆ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪಠ್ಯವಸ್ತುವನ್ನು ಪರಿಷ್ಕರಿಸಿ ನಂತರ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು 24.11.2014ರ ಆದೇಶದಲ್ಲೇ ನೀಡಲಾಗಿತ್ತು. ಆನಂತರ 19.09.2015 ರಂದು ಹೊಸ ಆದೇಶ ಹೊರಡಿಸಿ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪುನರ್ ರಚಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು ನೀಡಲಾಯಿತು. ಹೀಗೆ ಸಮಗ್ರ ಪರಿಷ್ಕರಣೆಗೊಂಡ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು 2016-17 ರ ಬದಲು 2017-18ನೇ ಶೈಕ್ಷಣಿಕ ವರ್ಷದಲ್ಲಿ ಜಾರಿಗೊಳಿಸಲಾಗುವುದೆಂದು ಇದೇ ಆದೇಶದಲ್ಲಿ ತಿಳಿಸಲಾಯಿತು.

ಅನೇಕ ವ್ಯಕ್ತಿಗಳೂ ಸಂಘಟನೆಗಳೂ ಸ್ವಯಂಪ್ರೇರಿತರಾಗಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಮಾಹಿತಿದೋಷ, ಆಶಯದೋಷಗಳನ್ನು ಪಟ್ಟಿಮಾಡಿ ಶಿಕ್ಷಣ ಸಚಿವರಿಗೆ, ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘಕ್ಕೆ ಕಳುಹಿಸಿದ್ದರು. ಅವುಗಳ ಪರಿಶೀಲನೆಮಾಡಿದ್ದಲ್ಲದೆ, ಸಮಿತಿಗಳಾಚೆಗೆ ಅನೇಕ ಸಂವಾದಗಳನ್ನು ಏರ್ಪಡಿಸಿ ವಿಚಾರ ವಿನಿಮಯ ಮಾಡಿಕೊಂಡಿದ್ದೇವೆ. ಪ್ರಾಥಮಿಕ ಮತ್ತು ಪ್ರೌಢಶಾಲಾ ಅಧ್ಯಾಪಕರ ಸಂಘಗಳ ಜೊತೆ ಚರ್ಚಿಸಿದ್ದಲ್ಲದೆ ಪ್ರಶ್ನಾವಳಿ ಸಿದ್ಧಪಡಿಸಿ ಅಧ್ಯಾಪಕರಿಗೆ ಕಳಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಸಂಗ್ರಹಿಸಲಾಗಿದೆ. ಅಧ್ಯಾಪಕರು, ವಿಷಯಪರಿವೀಕ್ಷಕರು ಮತ್ತು ಡಯಟ್ ಪ್ರಾಂಶುಪಾಲರ ಪ್ರತ್ಯೇಕ ಸಭೆಗಳನ್ನು ನಡೆಸಿ ವಿಶ್ಲೇಷಣಾತ್ಮಕ ಅಭಿಮತಗಳನ್ನು ಪಡೆಯಲಾಗಿದೆ. ವಿಜ್ಞಾನ, ಸಮಾಜವಿಜ್ಞಾನ, ಗಣಿತ, ಭಾಷೆ ಸಾಹಿತ್ಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರಿಗೆ ಮೊದಲೇ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಕಳುಹಿಸಿ ಆನಂತರ ಸಭೆ ನಡೆಸಿ ಚರ್ಚಿಸಲಾಗಿದೆ. ಮಹಿಳಾ ಸಂಘಟನೆ ಹಾಗೂ ವಿಜ್ಞಾನ ಸಂಬಂಧಿ ಸಂಸ್ಥೆಗಳನ್ನು ಆಹ್ವಾನಿಸಿ ಚಿಂತನೆ ನಡೆಸಲಾಗಿದೆ. ಹೀಗೆ ಎಲ್ಲಾ ಮೂಲಗಳಿಂದ ಪಡೆದ ಅರಿವಿನ ಆಧಾರದ ಮೇಲೆ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಅಗತ್ಯವಿದ್ದಕಡೆ ಪರಿಷ್ಕರಿಸಲಾಗಿದೆ.

© KTBS NOT TO BE REPUBLISHED

ಬಹುಮುಖ್ಯವಾದ ಇನ್ನೊಂದು ಸಂಗತಿಯನ್ನು ಇಲ್ಲಿ ಹೇಳಬೇಕು. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ (N.C.E.R.T) ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ತೌಲನಿಕವಾಗಿ ಅಧ್ಯಯನ ಮಾಡಿ ಸಲಹೆಗಳನ್ನು ನೀಡಲು ವಿಜ್ಞಾನ, ಗಣಿತ ಮತ್ತು ಸಮಾಜವಿಜ್ಞಾನಕ್ಕೆ ಸಂಬಂಧಿಸಿದಂತೆ ತಜ್ಞರ ಮೂರು ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಲಾಯಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ನೀಡಿದ ತೌಲನಿಕ ವಿಶ್ಲೇಷಣೆ ಮತ್ತು ಸಲಹೆಗಳನ್ನು ಆಧರಿಸಿ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟವನ್ನು ಹೆಚ್ಚಿಸಲಾಗಿದೆ. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳಿಗಿಂತ ನಮ್ಮ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟ ಕಡಿಮೆಯಾಗದಂತೆ ಕಾಯ್ದುಕೊಳ್ಳಲಾಗಿದೆ. ಜೊತೆಗೆ ಆಂಧ್ರ, ತಮಿಳುನಾಡು, ಮಹಾರಾಷ್ಟ್ರಗಳ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ನಮ್ಮ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಲಾಗಿದೆ.

ಇನ್ನೊಂದು ಸ್ಪಷ್ಟನೆಯನ್ನು ನೀಡಲು ಬಯಸುತ್ತೇನೆ. ನಮ್ಮ ಸಮಿತಿಗಳು ಮಾಡಿರುವುದು ಪರಿಷ್ಕರಣೆಯೇ ಹೊರತು ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸಮಗ್ರ ರಚನೆಯಲ್ಲ. ಆದ್ದರಿಂದ ಈಗಾಗಲೇ ರಚಿತವಾಗಿರುವ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸ್ವರೂಪಕ್ಕೆ ಎಲ್ಲಿಯೂ ಧಕ್ಕೆಯುಂಟುಮಾಡಿಲ್ಲ. ಲಿಂಗತ್ವ ಸಮಾನತೆ, ಪ್ರಾದೇಶಿಕ ಪ್ರಾತಿನಿಧ್ಯ, ರಾಷ್ಟ್ರೀಯ ಸಮಗ್ರತೆ, ಸಮಾನತೆ, ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯಗಳ ಹಿನ್ನೆಲೆಯಲ್ಲಿ ಕೆಲವು ಪರಿಷ್ಕರಣೆಗಳು ನಡೆದಿವೆ. ಹೀಗೆ ಪರಿಷ್ಕರಿಸುವಾಗ ರಾಷ್ಟ್ರೀಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟು ಮತ್ತು ರಾಜ್ಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟುಗಳನ್ನು ಮೀರಿಲ್ಲವೆಂದು ತಿಳಿಸಬಯಸುತ್ತೇನೆ: ಜೊತೆಗೆ ನಮ್ಮ ಸಂವಿಧಾನದ ಆಶಯಗಳನ್ನು ಅನುಸರಿಸಲಾಗಿದೆ. ಸಮಿತಿಗಳು ಮಾಡಿದ ಪರಿಷ್ಕರಣೆಯನ್ನು ಮತ್ತೊಮ್ಮೆ ಪರಿಶೀಲಿಸಲು ವಿಷಯವಾರು ಉನ್ನತ ಪರಿಶೀಲನ ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಪಡೆದು ಅಳವಡಿಸಲಾಗಿದೆ.

ಹೀಗೆ ಕ್ರಮಬದ್ಧವಾಗಿ ನಡೆದ ಕೆಲಸಕ್ಕೆ ತಮ್ಮನ್ನು ತಾವು ಸಂಪೂರ್ಣ ತೊಡಗಿಸಿಕೊಂಡ 27 ಸಮಿತಿಗಳ ಅಧ್ಯಕ್ಷರು ಮತ್ತು ಸದಸ್ಯರನ್ನು ಹಾಗೂ ಉನ್ನತ ಪರಿಶೀಲನಾ ಸಮಿತಿಯ ಸಮಸ್ತರನ್ನು ಕೃತಜ್ಞತೆಯಿಂದ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಅಂತೆಯೇ ಸಮಿತಿಗಳ ಕೆಲಸ ಸುಗಮವಾಗಿ ನಡೆಯುವಂತೆ ವ್ಯವಸ್ಥೆಮಾಡಲು ಕಾರ್ಯಕ್ರಮ ಅಧಿಕಾರಿಗಳಾಗಿ ನಿಷ್ಠೆಯಿಂದ ದುಡಿದ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘದ ಎಲ್ಲಾ ಅಧಿಕಾರಿಗಳನ್ನೂ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಸಹಕರಿಸಿದ ಸಿಬ್ಬಂದಿಗೂ ನಮ್ಮ ವಂದನೆಗಳು. ಅಭಿಪ್ರಾಯ ನೀಡಿ ಸಹಕರಿಸಿದ ಸರ್ವ ಸಂಘಟನೆಗಳು ಮತ್ತು ತಜ್ಞರಿಗೆ ಧನ್ಯವಾದಗಳು.

**ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ.**
ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.)
ಬೆಂಗಳೂರು

**ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ**
ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು
ಪಠ್ಯಪುಸ್ತಕ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)
ಬೆಂಗಳೂರು

© KTBS
NOT TO BE REPUBLISHED

## ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿಗಳ ವಿವರ

**ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು**

**ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ**, ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಮಿತಿ, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ) ಬೆಂಗಳೂರು–85

## ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ

**ಅಧ್ಯಕ್ಷರು**

**ಡಾ. ಸುಧಾಕರ,** ನಿವೃತ್ತ ತಮಿಳು ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಪ್ರಥಮದರ್ಜೆ ಕಾಲೇಜು, ಉರಿಗಾಂ, ಕೆ.ಜಿ.ಎಫ್.

**ಸದಸ್ಯರು**

**ಶ್ರೀ ಆಶೀರ್ವಾದಂ,** ಸ. ಶಿ, ಬೆಂಗಳೂರು ತಮಿಳು ಸಂಘಂ ಕಾಮರಾಜರ ಪ್ರೌಢಶಾಲೆ, ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀ ಬಾಬು,** SVCK ಪ್ರೌಢಶಾಲೆ, 2ನೇ ಮುಖ್ಯರಸ್ತೆ, ತ್ಯಾಗರಾಜ ನಗರ, ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀಮತಿ. ಅಮುದ,** ಉಪನ್ಯಾಸಕರು, ಜಿ.ಸಿ.ಸಿ.ಡಬ್ಲ್ಯು ಕಾಲೇಜು, ಫ್ರೇಜರ್‌ಟೌನ್, ಶಿವಾಜಿನಗರ, ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀಮತಿ. ಕಾತ್ಯಾಯಿನಿ,** ಸಹ ಶಿಕ್ಷಕರು, ಆಲ್ಫಾನ್ಸ್ ಹೈಸ್ಕೂಲ್, ಡೇವಿಸ್‌ರೋಡ್, ಥಾಮಸ್‌ಟೌನ್, ಬೆಂಗಳೂರು.

## ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಉನ್ನತ ಸಮಿತಿ ತಜ್ಞರುಗಳು

**ಡಾ. ಕಾರ್ಲಾಸ್,** ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

**ಡಾ. ಲಿಂಡಾಕ್ರಿಸ್ಟ್,** ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

**ಪ್ರೊ. ಸೀತಾ,** ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಸೆಂಟ್ ಫಿಲೋಮಿನಾ ಕಾಲೇಜು, ಬನ್ನಿಮಂಟಪ, ಮೈಸೂರು–ಬೆಂಗಳೂರು ರಸ್ತೆ, ಮೈಸೂರು.

**ಸಲಹೆ ಮತ್ತು ಮಾರ್ಗದರ್ಶನ:**

**ಶ್ರೀ ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ,** : ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀಮತಿ ಎಂ. ಡಿ. ಉಷಾ,** : ಉಪ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

**ಕಾರ್ಯಕ್ರಮ ಸಂಯೋಜಕರು :**

**ಶ್ರೀ ಶಂಕರೇ ಗೌಡ ಎಲ್.:** ಸಹಾಯಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ¨AU¼ÆgÄ

NOT TO BE REPUBLISHED ©KTBS

Z3W1U5


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | சூரியன் | 1 |
| 2. | நாட்டு வாழ்த்து | 3 |
| 3. | தேசியக்கொடி (தன் வரலாறு) | 11 |
| 4. | மூக்கைத் தூக்கிய காக்கை (பாடல்) | 22 |
| 5. | கடிதம் | 28 |
| 6. | நிலவில் மாந்தர் (பாடல்) | 37 |
| 7. | நமது மாநிலம் கருநாடகம் | 39 |
| 8. | ஹெலன் கெல்லர் | 47 |
| 9. | இரண்டு பூனைக் குட்டிகள் (பாடல்)- | 55 |
| 10. | உழைப்பே உயர்வு (நாடகம்-) | 61 |
| 11. | வானூர்தி | 78 |
| 12. | திரிபதிய திரிவிக்ரமன் ‘சர்வக்ஞர்’ | 81 |


NOT TO BE REPUBLISHED @KTBS

H2G6K3

# *1. சூரியன்*



© KTBS
NOT TO BE REPUBLISHED

ஆயிரம் கரங்கள் நீட்டி
　　அணைக்கின்ற தாயே போற்றி !
அருள் பொங்கும் முகத்தைக் காட்டி
　　இருள் நீக்கம் தந்தாய் போற்றி !

தாயினும் பரிந்து சாலச்
　　சகலரை அணைப்பாய் போற்றி !
தழைக்கும் ஓர் உயிர் கட்கெல்லாம்
　　துணைக்கரம் கொடுப்பாய் போற்றி !

*தூயவர் இதயம் போல*

*துலங்கிடும் ஒளியே போற்றி !*

*தூரத்தே நெருப்பை வைத்துச்*

*சாரத்தைத் தருவாய் போற்றி !*

*ஞாயிறே ! நலமே போற்றி !*

*நாயகன் வடிவே போற்றி !*

*நானிலம் உளநாள் மட்டும்*

*போற்றுவோம் போற்றி ! போற்றி !*

*- கவியரசு கண்ணதாசன்*

## *தமிழ் மொழி வாழ்த்து*

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*

*வாழிய வாழியவே !*

*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*

*வண்மொழி வாழியவே !*

*ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி*

*இசை கொண்டு வாழியவே !*

*சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்*

*துலங்குக வையகமே !*

*வாழ்க தமிழ்மொழி ! வாழ்க தமிழ்மொழி !*

*வாழ்க தமிழ்மொழியே !*

*- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்*

NOT TO BE REPUBLISHED @KTBS

# 2. நாட்டு வாழ்த்து

D8I5D4

கன்னட நாடு.

NOT TO BE REPUBLISHED KTBS

தங்கம் விளையும் பூமி
எங்கள் கன்னட பூமி.
சந்தனம் கமழும் நாடு
நந்த வனங்களின் நாடு
காவேரி ஆறு பாயும்
காட்டில் யானைகள் மேயும்
சாமுண்டி சக்தி மேவும்.
தவறாத பக்தி வாழும்
தங்கம் விளையும் பூமி
எங்கள் கன்னட பூமி.

***பாடி மகிழ்க :***

### ***கலைமகள் வணக்கம்***

*வெள்ளைத் தாமரை மீதினிலே*
*விளங்கும் தாயே! வணங்குகிறேன்*
*கள்ளம் கபடம் இல்லாமல்*
*கற்று நன்மை புரிந்திடவும்*
*உள்ளும் புறமும் தூய்மையுடன்*
*உலகில் வாழ்ந்தே உயர்ந்திடவும்*
*அள்ளி அள்ளிக் கலைகளையே*
*அளிப்பாய், அறிவை வளர்ப்பாயே !*

*- குழந்தைக் கவிஞர், அழ வள்ளியப்பா*

**நாடும் மொழியும் நமது இரு கண்கள்**

NOT TO BE REPUBLISHED @KTBS

# படகு உருவானது

நண்பர்கள் விளையாடச் சென்றனர்.

தவளை மட்டும்
தண்ணீரில் குதித்தது.

மற்றவர்களையும் அழைத்தது.
மற்றவர்கள் யோசித்தனர்!

© KTBS NOT TO BE REPUBLISHED

ஆளுக்கு ஒரு பொருள்
கொண்டு வந்தனர்.

சிறு படகு செய்தனர்.

படகில்
மகிழ்ச்சியாகச்
சென்றனர்.



📖 படங்களின் கீழ் உள்ள தொடர்களைக் கூறி குழந்தைகளை திரும்பக் கூறச் செய்க. பங்கேற்று நடித்துக் காட்டச் செய்க.

NOT TO BE REPUBLISHED

படத்தைப் பார்த்து கதை சொல்லவும்.

NOT TO BE REPUBLISHED

NOT TO BE REPUBLISHED

## படத்தைப் பார்த்து கதை சொல்லவும்.







@KTBS NOT TO BE REPUBLISHED

ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடிக்கவும்.



1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

6. ______________________________

@KTBS
NOT TO BE REPUBLISHED

# 3. தேசியக் கொடி
## (தன் வரலாறு கூறல்)

I6T2Q4

@KTBS NOT TO BE REPUBLISHED

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு கொடி உண்டு. அதுவே அந்நாட்டின் பெருமைக்கும், ஒற்றுமைக்கும், உரிமைக்கும், நல்வாழ்விற்கும் உரிய அடையாளமாகும். நமது இந்திய நாட்டின் தேசியக் கொடி தன்னைப் பற்றி கூறுவதைக் கேளுங்கள்.

***என் தோற்றம் :***

*தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்*
*தாழ்ந்து பணிந்து வணங்கிட வாரீர்*

என்று பாரதியார் பாடியது என்னைப் பற்றித்தான். நான், நீள் சதுர வடிவத்தில் காவி, வெண்மை, பச்சை ஆகிய மூன்று நிறங்களும், நடுவில் இராட்டையுமாக அமைந்து காங்கிரஸ் இயக்கத்தின் கொடியாக இருந்தேன். நம் நாடு விடுதலை அடைந்ததும் இருபத்து நான்கு ஆரங்களுடன் விளங்கும் அசோகச் சக்கரத்தை நடுவில் கொண்டு தேசியக் கொடி என்ற பெயரில் பெருமைக்கு உரியவனானேன். என் நீள, அகலம் மூன்றுக்கு இரண்டு என்ற விகிதமாகும்.

***காவிநிறம் :***

என்னிடம் மூன்று நிறங்கள் உள்ளன. அவற்றில், மேலே உள்ளது காவிநிறமாகும். பாரத நாட்டின் விடுதலைக்குத் தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் அளித்த தியாகிகளின் நினைவாகக் காவிநிறம் விளங்குகிறது.

***வெண்மை நிறம் :***

என் நடுவில் உள்ள வெண்மை நிறம் பாரத நாட்டு மக்கள் தூய்மையும், வாய்மையும், ஒழுக்கமும், மற்றும் பண்பாடும், கொண்டவர்களாக விளங்க வேண்டும் என்பதை நினைவுறுத்தும். இங்கு அமைந்துள்ள நீல நிற அசோகச் சக்கரம் போர் வேண்டாத அறநெறியில் ஆட்சி புரிந்த அசோகரின் நினைவை எடுத்துக் காட்டுகிறது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

### *பச்சை நிறம் :*

*கீழே உள்ள நிறம் பச்சை ஆகும். நம் நாட்டிலுள்ள இயற்கை வளங்கள் அனைத்தையும் குறிப்பதாக நான் பச்சை நிறத்தையும் பெற்றுள்ளேன்.*

### *என்னைப் போற்றும் முறை :*

*நான் இந்திய நாட்டின் உயிர் போன்றவன். என்னை எல்லா இடங்களிலும் பறக்க விடக் கூடாது. அரசு அலுவலகங்களில் மட்டுமே பறக்க விடவேண்டும். விடுதலைநாள் விழா, குடியரசு நாள் விழா ஆகிய நாட்களில் மட்டும் என்னைப் பொது இடங்களில் பறக்க விடவேண்டும். காலையில் கதிரவன் உதிக்குமுன் என்னை ஏற்றி, மாலையில் மறைவதற்குள் இறக்கி விடவேண்டும். என்னைக் கொடிக்கம்பத்தில் ஏற்றி, பாரதப் புதல்வர்கள் எனக்கு வணக்கம் செலுத்தும் போது நான் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்.*

NOT TO BE REPUBLISHED

நான் சில நேரங்களில் அரைக்கம்பத்தில் பறப்பேன், நாட்டின் தலைசிறந்த பெரியவர் ஒருவர் மறைந்து விட்டார் என்பதை அதன் மூலம் அறிவிப்பேன். எனக்கு நீங்கள் எத்தகைய அவமரியாதையையும் செய்யக் கூடாது.

பாரத நாட்டின் பெருமையை உலகுக்கு அறிவுறுத்திப் பட்டொளி வீசிப்பறக்கும் என்னை மதித்துப் போற்ற வேண்டும். கொடி காத்த குமரனைப் போல் என்னை உயர்வாக எண்ணிக் காப்பது உங்கள் கடமை ஆகும். எனவே, என்னைத் தகுந்த மரியாதையுடன் வணங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன். வாழ்க பாரதம்!

***அருஞ்சொற்பொருள் :***

*தாழ்ந்து = பணிந்து*

*விடுதலை = சுதந்திரம்*

*வாய்மை = உண்மை*

*அறநெறியில் = தரும வழியில்*

*தியாகம் = தன்னை அர்ப்பணித்தல்*

*கதிரவன் = சூரியன், பரிதி*

*அவதூறு = அவமரியாதை*

**I. வினாக்களுக்கு விடைதருக.**

*1.* ஒரு நாட்டின் அடையாளமாக விளங்குவது எது ?

விடை..................................................................

..................................................................

NOT TO BE REPUBLISHED @KTBS

2. மகாகவி பாரதியாரின் கொடியைப் பற்றிய பாடல் யாது?

விடை.............................................................................

.............................................................................

3. நமது தேசியக் கொடியின் அளவு யாது ?

விடை.............................................................................

.............................................................................

4. நமது தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் யாவை?

விடை.............................................................................

.............................................................................

5. அசோகச் சக்கரத்தில் எத்தனை ஆரங்கள் உள்ளன ?

விடை.............................................................................

.............................................................................

6. காவி நிறம் நமக்கு நினைவூட்டுவது யாது ?

விடை.............................................................................

.............................................................................

7. அசோகச் சக்கரவர்த்தியின் நினைவைக் காட்டுவது எது?

விடை.............................................................................

.............................................................................

8. பச்சை நிறம் உணர்த்துவது யாது ?

விடை.............................................................................

.............................................................................

NOT TO BE REPUBLISHED @KTBS

9. தேசியக் கொடியை எப்பொழுதெல்லாம் அரைக் கம்பத்தில் பறக்கவிடுவார்கள் ?

விடை.............................................................

.............................................................

10. நம் அனைவரின் கடமை யாது ?

விடை.............................................................

.............................................................

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. நமது கொடியில் ............ ............. .............. நிறங்கள் உள்ளன.
2. வெண்மை நிறம் பாரத நாட்டுமக்களின் .......... ............. ............ கொண்டவர்களாக விளங்க வேண்டும் என்பதை நினைவுறுத்தும்.
3. அற நெறியில் ஆட்சி புரிந்த மன்னர் .............
4. நான் இந்திய நாட்டின் .............. போன்றவன்.
5. காலையில் ............. உதிக்குமுன் ஏற்றி, மாலையில் ................ இறக்கி விடவேண்டும்.

## III. பிரித்தெழுதுக :

1. அந்நாட்டின்
2. அசோகச் சக்கரம்

NOT TO BE REPUBLISHED @KTBS

3. அறநெறியில்

4. கொடிக்கம்பத்தில்

5. நம்பிக்கையுடன்

## IV. பொருத்துக

| அ | | ஆ |
|---|---|---|
| 1. காவி நிறம் | அ. | அரைக்கம்பம் |
| 2. வெண்மை நிறம் | ஆ. | 24 ஆரங்கள் |
| 3. பச்சை நிறம் | இ. | தியாகம் |
| 4. தருமச்சக்கரம் | ஈ | தூய்மை |
| 5. தலை சிறந்தபெரியோர் மறைவு | உ. | வளமை |

## V. *அறிக :*

1. சுதந்திர நாளில் கொடியேற்றுவோம்.
2. குடியரசு நாளில் கொடியேற்றுவோம்.
3. நமது தேசிய கீதம் ஜன கண மன.
4. நமது தேசிய விலங்கு புலி.
5. நமது தேசிய மலர் தாமரை.
6. நமது தேசியப் பறவை மயில்.
7. கொடியின் நீள அகலம் மூன்றுக்கு இரண்டு என்ற விகிதமாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

## VI. *எதிர்ச்சொல் தருக :*

*1.* பெருமை x ....................

*2.* விடுதலை x ....................

*3.* வெண்மை x ....................

*4.* இயற்கை x ....................

*5.* காலையில் x ....................

*6.* உயர்வாக x ....................

## VII. *விடுபட்ட எழுத்தை நிரப்புக :*

| | | | | |
|---|---|---|---|---|
| ம | ணி | | கொ | டி |
| வ | | ங் | கி | ட |
| பா | ர | | யா | ர் |

| | | | |
|---|---|---|---|
| வெ | | மை | |
| ப | ச் | | |
| வி | | த | லை |

## VIII. *முதல் எழுத்தை மாற்றி வேறு வேறு சொற்களாக்குக:*




வெண்மை

........................

........................

........................

........................

........................

........................

........................

NOT TO BE REPUBLISHED @KTBS

## IX. *பாடலைப் பாடிப்பழகுக :*

தாயின் மணிக்கொடி பாரீர் அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் !

*1.* ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித்திகழும் செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர் ! (தாயின்)......

- பாரதியார்

@KTBS NOT TO BE REPUBLISHED

சில நிமிட வாழ்வு கொண்ட உயிரினம் ஈசல். இதற்கு வயிறும் கிடையாது. ஜீரண உறுப்பும் கிடையாது

### *படவிளக்க அகராதி*

*1.* விதான சௌதா

கருநாடக மாநிலத்தின் தலைநகரம் பெங்களூரு. கருநாடக சட்டசபையே விதான சௌதா. மிகவும் அழகான கட்டிடம் இதில் சட்டமன்றம் மற்றும் மேலவைகள் உள்ளன.



*2.* தாஜ் மகால்

உலகின் அதிசயங்களில் ஒன்று. யமுனை நதிக்கரையில் கட்டப்பட்டுள்ளது. இதனை ஷாஜஹான் தன் மனைவி மும்தாஜின் நினைவாகக் கட்டியுள்ளார்.

*3.* சாய்ந்த கோபுரம்

பைசா நகர சாய்ந்த கோபுரம் இத்தாலி நாட்டில் உள்ளது. உலக அதிசயங்களில் ஒன்று. இது ஒரு சாய்ந்த கோபுரம்.

*4.* ஹாக்கி

இந்தியாவின் பழமையான விளையாட்டுகளில் ஒன்று ஹாக்கி. இதில் இந்தியா பல தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.



*5.* எரிமலை

பூமியின் வெகு ஆழத்தில் உள்ள கற்குழம்பு, பூமியின் அழுத்தத்தினால் மிருதுவான மலைப் பகுதிகளில் வெளிவரும்.

*6.* ஜோக் நீர்வீழ்ச்சி

கருநாடக மாநிலத்தின் ஷிவமொக்கா மாவட்டத்தில் ஜோக் நீர் வீழ்ச்சியுள்ளது. காண்பவர் கண்களுக்கு விருந்தாக அமையும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

7. நான்கு முகம் கொண்ட சிங்கம் இது இந்தியாவின் தேசியச்சின்னம். மூன்று சிங்கங்களை மட்டுமே நம்மால் காண முடியும். இது சாரநாத்தில் உள்ள அசோகர் ஸ்தூபியை நினைவூட்டுகிறது.



8. மயில்

நமது நாட்டின் தேசியப்பறவை அழகிய தோகைகளை உடையது. வானில் மேகக் கூட்டங்களைக் கண்டால் மகிழ்ச்சியில் தோகை விரித்தாடும்.

8. மீன் கொத்திப் பறவை

அழகிய சிறுபறவை மீன், தவளை, புழு, பூச்சி. முதலியவற்றை உண்ணும். இதன் அலகு சிவப்பாகவும், சிறகுகள் நீலமாகவும் தலை, கழுத்து, செம்பழுப்பு நிறமாகவும் காணப்படும்.

9. மேகங்கள்

நீர் நிலைகளில் உள்ளநீர் ஆவியாகி மேலே சென்று மேகமாகத் தோன்றுகிறது. இது குளிர்ந்த காற்றுபட்டவுடன் மழையாகப் பொழிகின்றது.

**நாடும் வீடும் போற்ற வாழ்வோம்.**

@KTBS NOT TO BE REPUBLISHED

## 4. மூக்கைத் தூக்கிய காக்கை

L5Y9W3

வேலன் மனைவி கருப்பாயி;
விடிந்ததும் சண்டை துவக்கிடுவாள்.
காலம் எல்லாம் சண்டையிலே
கழிப்பாள் கணவன் வருந்திடவே.

சண்டை ஒருநாள் முற்றிடவே
சட்டென வேலன் கோபமுடன்
அண்டை யிலிருந்த கத்தியினால்
அறுத்து விட்டான் அவள்மூக்கை.

வெட்டி எடுத்த மூக்குடனே
விரைந்து வைத்தியரிடம் சென்றாள்:
ஒட்டுப் போட்டுத் தைத்திடுவீர்,
உமக்குப் புண்ணியம் எனச்சொன்னாள்.

NOT TO BE REPUBLISHED © KTBS

துண்டுமூக்கை மேசையின் மேல்
தூக்கி வைத்து வைத்தியரும்
துண்டுத் துணியால் அவள்முகத்தைத்
துடைத்துக் கொண்டு இருந்தனரே.

அறுந்து தனியாய் இருந்திட்ட
அந்த மூக்குத் துண்டதனை
பறந்து வந்த ஒரு காக்கை
பாய்ந்து தூக்கிச் சென்றதுவே !

கையைத் தட்டி வைத்தியரும்
கதறிப் பார்த்தார்: ஆனாலும்,
ஐயோ ! ஏதும் பயனில்லை
அலறித் துடித்தாள் கருப்பாயி !

காக்கை மூக்கைத் தின்றதுவோ !
கடலில் போட்டு விட்டதுவோ !
மூக்கை இழந்த 'சூர்ப்பனகை'
முக்கா டிட்டுத் திரும்பினளே !

- குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா

NOT TO BE REPUBLISHED @KTBS

*    கதைப்பாடலைச் சந்த நயத்துடன் தனியாகவும் குழுவாகவும் பாடச்செய்க :

**அருஞ்சொற்பொருள் :**

சண்டை = சச்சரவு

முற்றிடவே = அதிகரிக்கவே

விரைந்து = வேகமாக

வைத்தியர் = மருத்துவர்

அறுந்து = அறுபட்டு

அலறி = கதறி, அழுதல்

**பயிற்சி**

**I. வினாக்களுக்கு விடைதருக**

1. விடிந்ததும் வேலன் மனைவி என்ன செய்வாள் ?

விடை.............................................................

.............................................................

2. வேலன் கோபமுடன் என்ன செய்தான் ?

விடை.............................................................

.............................................................

3. கருப்பாயி வைத்தியரிடம் என்ன கூறினாள் ?

விடை.............................................................

.............................................................

©KTBS NOT TO BE REPUBLISHED

4. மூக்கை எங்கு வைத்தனர் ?

விடை.................................................................

.................................................................

5. மூக்கை எது தூக்கிச் சென்றது ?

விடை.................................................................

.................................................................

6. காக்கை மூக்கை என்ன செய்தது ?

விடை.................................................................

.................................................................

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. வேலன் மனைவி ................
2. வேலன் கோபமுடன் ............... அவள் மூக்கை.
3. ஒட்டுப் போட்டுத் தைத்திடுவீர் ............ புண்ணியம்.
4. பறந்து வந்த ஒரு ............... மூக்குத் துண்டதனை தூக்கிச் சென்றது.
5. மூக்கை இழந்த ................. முக்காடிட்டுத் திரும்பினளே.

## III. எதிர்ச்சொல் தருக :

1. கணவன் x ...................
2. அண்டை x ...................
3. வெட்டி x ...................

NOT TO BE REPUBLISHED @KTBS

4. விரைந்து x ....................

5. மேல் x ....................

## IV. பிரித்தெழுதுக :

1. துவக்கிடுவாள் = ...................
2. மூக்குடனே = ...................
3. வைத்தியரிடம் = ...................
4. துண்டுத்துணி = ...................
5. கையைத்தட்டி = ...................

## V. வரிசைப் படுத்தி எழுதுக :

1. ஒட்டுப் போட்டுத் தைத்திடுவீர் உமக்குப் புண்ணியம் எனச் சொன்னாள்.
2. மூக்குத் துண்டை காகம் தூக்கிச் சென்றது.
3. விரைந்து வைத்தியரிடம் சென்றாள்.
4. வேலன் கோபமுடன் கருப்பாயியின் மூக்கை அறுத்துவிட்டான்.
5. விடிந்ததும் கருப்பாயி சண்டையைத் துவக்கிடுவாள்.
6. மூக்கை இழந்த சூர்ப்பனகை முக்காடிட்டுத் திரும்பினாள்.
7. காக்கை மூக்கைத் தின்றதுவோ ! கடலில் போட்டு விட்டதுவோ!

**தீமை செய்தவர்க்கும் நன்மை செய்.**

NOT TO BE REPUBLISHED @KTBS

## நல்லொழுக்கங்கள்



©KTBS NOT TO BE REPUBLISHED

P3J6S6

# 5. கடிதம்

(உம் ஊரில் நடக்கும் திருவிழாவைக் கண்டு களிக்க வருமாறு நண்பனுக்கு அழைப்புக் கடிதம் எழுதவும்)

25 துங்கை அணை,
02.02.2011.

அன்பு நண்பா,

வணக்கம், சென்ற மாதம் உனது ஊரில் நடைபெற்ற மாரியம்மன் திருவிழாவில் நானும் எனது நண்பர்களுடன் கலந்து கொண்டேன். அதே போல் என்னுடைய ஊரில் அடுத்த வாரம் நடைபெற உள்ள ஹம்பி உற்சவத்தைக் கண்டுகளித்து மகிழ வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஹம்பி அனைவரும் போற்றும், என்றும் மறக்க முடியாத வரலாறு படைத்த ஓர் ஊர். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் ஹம்பி உற்சவம் கொண்டாடப்படுகிறது. இது பூமித் தாயின் மடியில் பிறந்து வளர்ந்த மாபெரும் நாகரீக நகரம். இங்குள்ள துங்கபத்திரா நதி கற்பாறைகள், காடுகள், மேடுகள், மற்றும் சுற்றிலும் மலைகள் ஊடே வெள்ளிக் கொடி போன்று வளைந்து நெளிந்து ஓடும். இத்துங்கபத்திரா தாய் தன் இனிய நீரால் மண்ணையும், மக்களையும் குளிரச்செய்து வளங் கொழிக்கச் செய்கிறாள்.

இந்நகரில் எங்கு நோக்கினும் கோயில்கள், கோபுரங்கள். சமயச் சின்னங்களின் காட்சிகள் தென்படுகிறது.

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போன்று அமைந்துள்ள விருபாட்சர் ஆலயம், கண்ணுக்கு விருந்தளிக்கும். பல நூற்றாண்டுகள் புகழுடனும், மேன்மையுடனும் விளங்கிய விஜயநகரம், பாமினி சுல்தான்களின் படையெடுப்பால் சிற்பங்கள், கோயில்கள், மற்றும் மண்டபங்கள் உருக்குலைந்து, சிதைந்து காணப்படுகின்றன.

சிதைந்த, உருக்குலைந்த சிற்பங்களை மையஅரசு சீர் செய்துவருகிறது. பழைய நிலைமை சிறிதும் மாறாமல் புதுப்பித்துக் கொண்டு வருகின்றது. இங்கு உற்சவ காலத்தில் பல்வேறு இடங்களில் மேடைகள் அமைக்கப்பட்டு ஒளி, ஒலிகாட்சிகள், நடனம், சங்கீதம், கிராமியக்கலைகள் சிலம் பாட்டம், மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED



இதனைக் காண கண் கோடி வேண்டும். ஆகவே, நண்பா, நீ தவறாமல் ஹொசப்பேட்டைக்கு நண்பர்களுடன் வந்து இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இன்புறவேண்டும் என்று விரும்புகிறேன். உடனே பதில் கடிதம் எழுத வேண்டுகிறேன்.

பெறுநர்

வ. எத்திராஜன்,
எண். 2, கம்பர் தெரு,
ஆதியப்பன் புதூர்,
காட்பாடி வட்டம்,
வேலூர் மாவட்டம்.

உன் அன்புள்ள நண்பன்,
(மூர்த்தி)

©KTBS NOT TO BE REPUBLISHED

## I. படித்தறிக :

1. துங்கபத்திரா நதி கற்பாறைகள், காடுகள், மேடுகள், மற்றும் சுற்றிலும் மலைகள் ஊடே வளைந்து நெளிந்து ஓடும்.
2. தன் இனிய நீரால் மண்ணையும் மக்களையும் குளிரச் செய்து வளங்கொழிக்கச் செய்கிறாள்.
3. எங்கு நோக்கினும் கோயில்கள், கோபுரங்கள் சமயச் சின்னங்கள் நிறைந்த நகரம்.
4. விருபாட்சர் ஆலயம் கண்ணுக்கு விருந்தளிக்கும்.
5. பாமினி சுல்தான்களின் படையெடுப்பால் சிற்பங்கள் கோயில்கள், மண்டபங்கள் உருக் குலைந்து, சிதைந்து காணப் படுகின்றன.
6. மையஅரசு சிதைந்த, உருக்குலைந்த சிற்பங்களை, பழைய நிலைமை சிறிதும் மாறாமல் புதுப்பித்துக் கொண்டு வருகிறது.

7. உற்சவ காலத்தில் பல்வேறு இடங்களில் மேடைகள் அமைக்கப்பட்டு ஒளி, ஒலிக் காட்சிகள் நடனம், சங்கீதம், கிராமியக் கலைகள் சிலம்பாட்டம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

## II. வினாக்களுக்கு விடை அளிக்கவும் :

1. மாரியம்மன் திருவிழாவில் யார் யார் கலந்துகொண்டனர் ?

விடை..............................................................

..............................................................

2. வரலாறு படைத்த ஊர் எது ?

விடை..............................................................

..............................................................

3. ஒவ்வொரு ஆண்டும் ஹம்பி உற்சவம் எம்மாதத்தில் நடை பெறும் ?

விடை..............................................................

..............................................................

4. துங்கபத்திரா நதி எவ்வாறு ஓடுகிறது ?

விடை..............................................................

..............................................................

5. ஹம்பியில் என்னென்ன காட்சிகளைக் காணலாம் ?

விடை..............................................................

..............................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

6. மைய அரசு எதனைச் சீர் செய்து வருகிறது ?

விடை............................................................................

............................................................................

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ஹம்பி உற்சவம் ............ மாதத்தில் நடைபெறும்.
2. துங்கபத்திரா நதி வெள்ளிக் கொடிபோன்று ............ ............ ஓடும் .
3. எங்கு நோக்கினும் ............ ............ சமயச் சின்னங்கள் நிறைந்த நகரம்.
4. ............... ஆலயம் கண்ணுக்கு விருந்தளிக்கும்.
5. உற்சவகாலத்தில் மேடைகள் அமைக்கப்பட்டு ........... ............. காட்சிகள் நடத்தப்படுகின்றன.

## IV. பிரித்தெழுதுக :

1. மாரியம்மன்
2. வெள்ளிக்கொடி
3. குளிரச் செய்து
4. படையெடுப்பால்.
5. உருக்குலைந்து

## V. எதிர்ச்சொல் தருக :

1. மகிழ x ....................
2. விரும்பு x ....................
3. குளிர் x ....................

@KTBS NOT TO BE REPUBLISHED

4. புகழ் x ....................

5. சிறிதும் x ....................

**IV. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அன்புள்ள அப்பா அவர்களுக்கு.

.................. அம்மா ............... இருக்கிறார்களா ? என்னுடைய அன்பான .................. அவர்களுக்குச் சொல்லுங்கள். எனக்கு நீங்கள் அடுத்தமுறை இங்கு வரும்போது பாரதியார் கவிதைகள் புத்தகம் கொண்டு வாருங்கள். எனக்கு சந்திரன் பொங்கல் வாழ்த்து அனுப்பி இருந்தான். அவனுக்கு நான் ................. தெரிவித்ததாகக் கூறுங்கள். தாத்தா, பாட்டி, மாமா அத்தை அனைவருக்கும் என் ................ வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : உங்கள் ...............,

முனிராஜ்.

(பணிவான, வணக்கம், வணக்கத்தை, நலமாக, தயவு செய்து, நன்றி, அன்புள்ள)

**பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து உங்கள் வகுப்பு ஆசிரியருக்கு விடுமுறை விண்ணப்பம் எழுதுக :**

அனுப்புநர் : ................................,

................................,

................................,

................................

@KTBS NOT TO BE REPUBLISHED

பெறுநர் : .................................,

.................................,

.................................,

.................................

ஐயா, எனக்குக் ................. இருப்பதால் ...................... வர இயலவில்லை, எனவே இன்று ஒருநாள் .................... விடுப்பு ................. வேண்டுகிறேன்.

இடம் : ....................                                    தங்கள் பணிவுள்ள.

நாள் : ......................                                    ............................

(வழங்கும்படி, பள்ளிக்கு, மட்டும், காய்ச்சலாக)

**ஊரோடு ஒத்துவாழ்.**

**வண்ணம் தீட்டுக**

@KTBS NOT TO BE REPUBLISHED

## வீடுகளின் வகைகள்



## 6. நிலவில் மாந்தர்

மாந்தர் மூவர் பறந்தனர் ;
வானம் நோக்கிச் சென்றனர்.
காந்தப் பரப்பைக் கடந்தனர் ;
கவின் நிலவில் குதித்தனர் !



வியப்பு ! வியப்பு !! வியப்படா !!!
வெண்ணிலாவின் கதையடா !
அயர்விலாதமுயற்சிகள் !
அறிவு கண்ட வெற்றிகள்.

மக்கள் வாழும் உலகம் போல்,
மற்ற உலகம் தேடினர் !
தக்க வாறு நிலவினைத்
தாவிக் கண்டு மீண்டனர்.

மானொன் றிருக்கும் காட்சிபோல்
மக்கள் பார்த்த நிலவிலே
ஆனை விழுந்தபள்ளம் போல்
அகன்ற குழிகள் கண்டனர் !

குதித்து நடந்து சென்றனர் ;
குனிந்து நிமிர்ந்து பார்த்தனர்;
புதிய தரையில் உலவினர்;
புகைப் படங்கள் பிடித்தனர்.

காற்றிலாத பைகளில்
கல்லும் மண்ணும் நிரப்பினர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

வேற்றோர் உலகத் தரையிலே
    வெற்றிக் கொடியை நாட்டினர்.

நிலவுத் தரையில் நின்று, நாம்
    நிற்கும் உலகைப் பார்த்தனர் !
குலவும் அழகைச் சுவைத்தனர் !
    கோடி விண்மீன் கண்டனர் !

பாட்டன் கால நிலவுதான் !
    பாட்டி சொன்ன கதைகள்தாம் !
வீட்டு வாயிற் படியிலே
    வெளிச்சம் தந்த நிலவுதான் !

காற்றும் நீரும் அங்கிலை !
    கடலும் மலையும் அங்கிலை
பீற்றைப் புல்லும் அங்கிலை !
    பிழைக்கும் உயிரும் அங்கிலை.

வானில் பறந்த மூவரும்
    வந்து கடலில் குதித்தனர் !
நானும் நீயும் இருக்கிறோம்;
    நாட்டுக் கென்ன செய்கிறோம்?

- பெருஞ்சித்திரனார்

**நறுந்தொகை.**

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

பிறரிடம் பிச்சை எடுத்து உயிர் வாழ்ந்தாலும் கல்வி கற்பதை ஒரு நாளும் விட்டு விடாதே.

©TBS NOT TO BE REPUBLISHED

R6C9M9

# 7. நமது மாநிலம் - கருநாடகம்

கருநாடகம் நமது மாநிலம். இது இந்தியாவின் தென் பகுதியில் இருக்கிறது. தமிழ்நாடு, ஆந்திரம், மகாராட்டிரம், கோவா, மற்றும் கேரளம் ஆகியவை நம் அண்டை மாநிலங்கள்.

நமது மாநிலத்தின் மேற்கில் அரபிக்கடல் இருக்கிறது. பெங்களூர் நம் மாநிலத்தின் தலை நகரம். இதனை பூங்கா நகரம் எனவும் கூறுவர்.

நமது மாநிலத்தில் காடுகளும் மலைகளும் அதிகம். காடுகளில் தேக்கு, சந்தனம், போன்ற மரங்கள் உள்ளன. யானை, புலி, கரடி, மற்றும் மான் முதலிய விலங்குகள் வாழ்கின்றன.

NOT TO BE PUBLISHED



காவிரி, சராவதி, துங்க-பத்திரா முதலியவை நமது மாநிலத்தில் ஓடுகின்ற பெரிய ஆறுகள். கண்ணம்பாடி அணையும், துங்கபத்திரா அணையும் நம் மாநில அணைகளுள் பெரியவை. கண்ணம்பாடி அணை மைசூருக்கு அருகில் உள்ளது.

இதை கிருஷ்ண ராஜசாகர் என்று அழைக்கிறோம்.

துங்கபத்திரா அணைக்கட்டு ஹொாசப்பேட்டே என்ற நகருக்கு அருகில் உள்ளது. நெல், பருத்தி, ராகி, சோளம், கரும்பு, மற்றும் எண்ணெய் வித்துக்கள் அதிகளவில் விளைகின்றன.

கோலாரிலும், ஹட்டியிலும் தங்கம் கிடைக்கிறது. குதிரை முகம், ஹொாசப்பேட்டே, செண்டூர் முதலிய இடங்களில் மங்கனீசும் இரும்புத்தாதும் அதிகளவில் கிடைக்கின்றன.

கருநாடகத்தில் பார்த்து மகிழ வேண்டிய இடங்கள் அதிகளவில் உள்ளன. அவற்றில் பேலூரு, ஹளேபீடு, சரவண பெளகொளா, பாதாமி, பட்டதகல், ஹம்பி, சிருங்கேரி, ஐஹொளே, விஜயாபுரா, மைசூரு, ஜோக் அருவி போன்றவை முக்கியமானவை.

நம் மாநிலத்தில் 30 மாவட்டங்கள் உள்ளன. இம்மாநிலத்தில் பெரும்பாலோர் கன்னடம் பேசுகிறார்கள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு, குடகு, கொங்கனி, மராட்டி, உருது முதலிய மொழிகளைப் பேசும் மக்களும் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு வாழ்கின்றனர்.

***படித்தறிக :***

*கருநாடக மாநிலத்தின் தலைநகரம் பெங்களூரு.*

*காவிரி, துங்க பத்திரா, சராவதி முதலிய பெரும் ஆறுகள் பாய்கின்றன.*

*துங்க பத்திரா அணைக் கட்டு ஹொசப்பேட்டைக்கு அருகில் உள்ளது.*

*ஹம்பி, பேலூர், ஹளேபீடு, சரவண பெளகொளா, பாதாமி, பட்டதகல், சிருங்கேரி, விஜயபுரா, மைசூரு போன்ற இடங்கள் சரித்திரப் புகழ் பெற்றவை.*

*ஹொசப்பேட்டே, குதிரை முகம், செண்டூர், போன்ற இடங்களில் இரும்பும், மங்கனீசும் அதிகளவில் கிடைக்கின்றன.*

***அருஞ்சொற் பொருள் :***

*அண்டை = பக்கத்து ; தென் = தெற்கு ; ஓடுகின்ற = பாய்கின்ற ; ஒற்றுமை = ஒன்று சேர்ந்திருத்தல்.*

NOT TO BE REPUBLISHED ©KTBS

## *பயிற்சி*

**I.** ***கருநாடக மாநிலத்தில்***

| புகழ் பெற்ற இடங்கள் | கிடைக்கும் கனிமங்கள் | பேசும் மொழிகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

@KTBS NOT TO BE REPUBLISHED

**II.** ***விடை எழுதுக :***

*1.* பூங்கா நகரம் என்று எது அழைக்கப்படுகிறது ?

.....................................................................

.....................................................................

*2.* கருநாடக மாநிலத்தில் பாயும் ஆறுகள் யாவை ?

.....................................................................

.....................................................................

*3.* தங்கம் எங்கெங்கு கிடைக்கிறது ?

.....................................................................

.....................................................................

4. கருநாடக மாநிலத்தில் அதிகளவில் விளையும் விளைப் பொருட்கள் யாவை ?

.................................................................................

.................................................................................

5. நமது மாநிலத்தில் பார்த்து மகிழவேண்டிய இடங்கள் யாவை ?

.................................................................................

.................................................................................

6. நம் மாநிலத்திலுள்ள மக்கள் பேசும் மொழிகள் யாவை?

.................................................................................

.................................................................................

7. நமது மாநிலத்தில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன ?

.................................................................................

.................................................................................

**III. முதல் எழுத்தை மாற்றி வேறு சொல்லாக்கி எழுதுக :**

மொழி .................. .................. ..................

அணை .................. .................. ..................

காற்று .................. .................. ..................

மரம் .................. .................. ..................

கன்று .................. .................. ..................

குட்டி .................. .................. ..................

@KTBS NOT TO BE REPUBLISHED

## IV. சொற் கோபுரம் :

பொங்கல் விழாகொண்டாடப்படும் திங்கள்

உணவுப் பயிர்

சரித்திரத்தில் புகழ் பெற்ற இடம்

விலை உயர்ந்த உலோகம்

கோல் கும்பஸ் உள்ள இடம்



இந்நகருக்கு அருகில் துங்கபத்திரா அணைக்கட்டு உள்ளது.

கருநாடக மாநிலத்தில் பாயும் ஆறுகள்

| | | |
|---|---|---|
| கா | | ரி |

| | | |
|---|---|---|
| து | | கா |

| | | | |
|---|---|---|---|
| | ரா | வ | தி |

| | | | |
|---|---|---|---|
| ப | | தி | ரா |

@KTBS
NOT TO BE REPUBLISHED

**பாடி மகிழ்க :**

கற்றிட வேணும் :

ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே - நீ
ஏன்படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே !
நாட்டின் நெறிதவறி நடந்து விடாதே - நீ
நல்லவர்கள் தூற்றும் படி வளர்ந்து விடாதே !
மூத்தோர் சொல்வார் கதைகளை மீறக்கூடாது - பண்பு

முறைகளிலும், மொழிதனிலும் மாறக் கூடாது.
மாற்றார்கைப் பொருளை நம்பி வாழக் கூடாது - தன்
மானமில்லாக் கோழையுடன் பேசக்கூடாது.
துன்பத்தை வெல்லும் கல்விகற்றிடவேணும் - கெட்ட
சோம்பலைக் கொல்லுந்திறன் பெற்றிட வேணும்
வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேணும் - அறிவு
வளர்ச்சியிலே வான் முகட்டைத் தொட்டிட வேண்டும்.

- பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம்

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.**

சொல்லுவோம், எழுதுவோம்.

நான் — படிப்பேன்
நான் — ஓடுவேன்
நான் — தூங்குவேன்

நாங்கள் — ______________
நாங்கள் — ______________
நாங்கள் — ______________

@KTBS
NOT TO BE REPUBLISHED

# 8. ஹெலன் கெல்லர்

M2U6B9



அலபாமா என்னும் சிறிய நகரத்தில் 1880 - ஆம் ஆண்டு ஒரு அழகிய பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் பெற்றோர் அவள் மீது மிகவும் அன்பு செலுத்தினர். அவளுக்கு ஹெலன் கெல்லர் என்று பெயரிட்டனர். ஒரு நாள் குழந்தைக்குக் காய்ச்சல் வந்தது, நாளுக்கு நாள் காய்ச்சலின் தாக்கம் அதிகமானது. குழந்தை குணமடைய குடும்பத்திலுள்ள அனைவரும் பாடுபட்டனர். பிறகு ஆண்டவன் விட்ட வழி நம்மால் முடிந்தளவு பார்த்து விட்டோம். பிழைப்பதும், பிழைக்காததும் அவன் செயலே! என்று இருந்து விட்டனர்.

ஹெலன் நோயிலிருந்து விடுபட்டாள், ஆனால் கண்பார்வையும், கேட்கும் திறனும் போய் விட்டது என்பதை பெற்றோர் அறிந்தனர். குழந்தை வளர வளர பெற்றோர் அவள் நிலையைக் கண்டு வருந்தினர். ஹெலன் தன் தாய் தன்னருகிலிருக்க வேண்டும் என அழுது அடம் பிடிப்பாள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

தந்தை குழந்தைக்கு என்ன தேவையோ அதைக் கொடு என்று கூறுவார்.



ஹெலனுக்குக் கண் பார்வையும் கேட்கும் திறனும் இல்லாவிட்டாலும், அவள் மிகவும் புத்திசாலியாக இருந்தாள். ஹெலன் எதையும் கற்கமாட்டாள் என்று பலர் நினைத்தனர் ஆனால், அவள் தாய் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஹெலன் மிகவும் துடிப்பான சிறுமி. ஆனால் அவளை எவ்வாறு முன்னேற்றுவது என்று நினைத்து தாய் கவலைப்படுவாள்.

ஹெலன் மிக முரட்டுத்தனம் மிக்கவளாக வளர்ந்தாள். தனக்கு தலைவாரிவிட யாரையும் அனுமதிக்கமாட்டாள். அவள் ஆடைகள் எப்பொழுதும் அழுக்காகவே காணப்படும். அடிக்கடி கோபித்துக் கொள்வாள். சில வேளைகளில் தரையில் படுத்துக் கை கால்களை உதைப்பாள்.

அவள் பெற்றோர்கள் அவளுக்குக் கல்வி கற்பிக்க ஒரு ஆசிரியரை ஏற்பாடு செய்தனர். சுல்லிவான் என்னும் ஆசிரியை

© KTBS NOT TO BE REPUBLISHED

ஹெலனுக்குப் பாடம் கற்பிக்க ஒப்புக் கொண்டார். சுல்லிவான், ஹெலனுக்கு ஒரு பொம்மையைக் கொடுத்து பொம்மை என்று உச்சரிக்குமாறு கூறினார். ஹெலனின் கையில் ஆசிரியை தன் விரல்களால் பொம்மை என்ற எழுத்தை எழுதி எழுத்தைக் கூட்டி உச்சரிக்க தன் கை சைகை முறையில் செய்து காட்டினார்.

ஹெலனும் தன் ஆசிரியை செய்து காட்டியதைப் போலச் செய்து காட்டினாள். அவள் என்ன செய்கிறாள் என்பதை ஆசிரியரால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஹெலன் தன் ஆசிரியையை மிகவும் விரும்பினாள். சுல்லிவான் மிகவும் கண்டிப்பானவர்; அன்புமிக்கவர். ஹெலனுக்காக அநேக சொற்களைத் தன் கை சைகை மூலம் உணர்த்திப் புரிந்து கொள்ளுமாறு செய்தார்.

ஒரு நாள் ஆசிரியை ஹெலனை ஓடும் நீரில் கையை நனைக்க வைத்தார். ஆசிரியை 'நீர்' என உச்சரிக்க ஹெலன் அது நீர் என உணர்ந்தாள். நீர் என்பது ஈரமானது என்பதையும் உணர்ந்தாள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

உலகில் சொற்கள் மிகவும் முக்கியமானது என்பதை அறிந்தாள். இவ்வுலகில் அவள் அறிய வேண்டிய பொருட்கள் அனைத்தையும், சொற்கள் தான் உணர்த்தும் என அறிந்தாள். இதுவே பிரெய்ல் முறையாகும்.

செவித்திறன் அற்றோர், பேசும் திறனற்றோர் தங்களுடைய எண்ணங்களை எடுத்துரைக்க பிரெய்ல் முறையையே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

***படித்தறிக :***

அழகான குழந்தை ஹெலன் கெல்லர்.

ஒரு நாள் குழந்தைக்கு காய்ச்சல் வந்தது.

ஹெலனுக்கு காய்ச்சலால் கண்பார்வையும் கேட்கும் திறனும் போய்விட்டது.

ஹெலன் மிகவும் புத்திசாலியாக இருந்தாள்.

ஹெலன் கல்வி கற்க ஒரு ஆசிரியரை பெற்றோர் ஏற்பாடு செய்தனர்.

பொம்மை என்ற எழுத்தை எழுதிக்கூட்டி உச்சரிக்க ஆசிரியை கை சைகை முறையில் செய்து காட்டினார்.

செவித்திறன் அற்றோர், பேசுந்திறன் அற்றோர் தங்களுடைய எண்ணங்களை எடுத்துரைக்க பிரெய்ல் முறையை இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

## I. *ஒரு வாக்கியத்தில் விடை தருக :*

1. ஹெலன் எந்த ஆண்டு எங்கு பிறந்தாள் ?

   ..................................................................................

   ..................................................................................

2. ஹெலன் கெல்லர் எந்தெந்தத் திறனை இழந்தாள் ?

   ..................................................................................

   ..................................................................................

3. ஹெலனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியை யார் ?

   ..................................................................................

   ..................................................................................

4. சுல்லிவான் சொற்களை எவ்வாறு உணர்த்தினார் ?

   ..................................................................................

   ..................................................................................

5. செவித்திறன் மற்றும் பேசும் திறனற்றோர் கற்கும் முறை எது ?

   ..................................................................................

   ..................................................................................

@KTBS
NOT TO BE REPUBLISHED

## II. *கோடிட்ட இடங்களை நிரப்புக :*

1. ஹெலன் கெல்லரை .................. நோய் தாக்கியது.
2. அவள் மிகவும் .................. இருந்தாள்
3. ஹெலன் கெல்லருக்கு .................. திறனும் .................. திறனும் போய்விட்டது.

4. சுல்லிவான் மிகவும் ..................

5. ஹெலனுக்கு தன் ஆசிரியையை மிகவும் ..................

**III. எதிர்ச் சொல் தருக :**

1. சிறிய x ...................
2. அன்பு x ...................
3. புத்திசாலி x ...................
4. ஓடும் x ...................
5. ஈரமான x ...................

**IV. சேர்த்தெழுதுக :**

1. குணம் + அடைய = .................
2. தன் + அருகில் = ...................
3. ஈரம் + ஆனது = ...................
4. செவி + திறன் = ...................
5. திறன் + அற்றோர் = .................

**V. வரிசைப் படுத்தி எழுதுக :**

கண்பார்வையும் கேட்கும் திறனும் போய்விட்டது.

குழந்தைக்குக் காய்ச்சல் வந்தது.

ஹெலன் தன் தாய் அருகிலிருக்க வேண்டும் என அடம் பிடிப்பாள்.

குழந்தைக்குப் பெற்றோர் ஹெலன் கெல்லர் என்று பெயரிட்டனர்.

ஹெலன் நோயிலிருந்து விடுபட்டாள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

சுல்லிவான் மிகவும் கண்டிப்பானவர்.

செவித்திறன் அற்றோர் பேசும் திறன் அற்றோர் தங்களுடைய எண்ணங்களை எடுத்துரைக்க பிரெய்ல் முறையைப் பயன்படுத்துகின்றனர்.

பெற்றோர்கள் ஹெலன் கல்விக்கற்க ஒரு ஆசிரியையை ஏற்பாடு செய்தனர்.

ஒரு நாள் ஆசிரியை ஹெலனை ஓடும் நீரில் கையை நனைக்க வைத்தார்.

**VI. கீழ்க்காணும் ஒலிகளில் பேரொலி – மற்றும் சிற்றொலியை எடுத்தெழுதுக :**

கைத்தட்டுதல், வண்ணத்துப் பூச்சி பறத்தல், மரத்திலிருந்து இலை கீழே விழுதல், ஸ்ஸ், சீட்டியடித்தல், பட்டாசு வெடித்தல், இரகசியம் பேசுதல், சுழல்காற்று, இறகு விழுதல், எறும்பு ஊர்தல்.

| பேரொலி | சிற்றொலி |
|---|---|
| | |

©KTBS NOT TO BE REPUBLISHED

## பாடி மகிழ்க.

பஞ்சாப் செல்லலாம்

பஞ்சுமிட்டாய் வாங்கலாம்.

ராமேஸ்வரம் செல்லலாம்,

ரசகுல்லா வாங்கலாம்.

குஜராத் செல்லலாம்,

குலோப் ஜாமுன் வாங்கலாம்.

ஸ்ரீ ரங்கம் செல்லலாம்

சீனிமிட்டாய் வாங்கலாம்.

தேடித் தேடி வாங்கியே,
கூடிக் கூடித் தின்னலாம்.

### சரியா தவறா என குறிப்பிடு :

1. காயத்தைப் பஞ்சினால் கழுவவேண்டும்.
2. தூசி கண்ணில் விழுந்தால் எரிச்சல் ஏற்படும்.
3. சூடான நீரில் கண்களைக் கழுவ வேண்டும்.
4. காதில் குச்சிவிட்டு குடையக் கூடாது.
5. கொதிக்கும் நீரை உடம்பில் கொட்டிக் கொண்டால் குளிர்ச்சியான தண்ணீரை ஊற்றவேண்டும்.

**கூடி வாழ்ந்தால் கோடிநன்மை.**

NOT TO BE REPUBLISHED ©KTBS

## 9. கதைப்பாடல்
## இரண்டு பூனைக் குட்டிகள்

S7X2X3

இரண்டு பூனைக் குட்டிகள்
இரைபிடிக்கச் சென்றன !
இருண்ட அறை ஒன்றினில்
இரண்டும் பதுங்கி நின்றன.



எங்கிருந்தோ எலி ஒன்று
எம்பிக் குதித்து வந்தது.
பதுங்கி இருந்த பூனையும்
பாய்ந்து அதனைப் பிடித்தது.



@KTBS NOT TO BE REPUBLISHED

பிடித்த எலியை திண்ணைக்கு
எடுத்து பூனை சென்றது
தின்னப் போகும் சமயத்தில்
அடுத்த பூனை வந்தது.

எனக்கும் பங்கு கொடுத்திடு
என்றே அதுவும் கேட்டது
முடியா தென்றே அப்பூனை
மொழிந்து சீறி விழுந்தது !

ஒன்றை ஒன்று கடித்துமே
உரக்க சப்தம் செய்தன
கண்கள் மூடி இரண்டுமே
கட்டிப் புரண்டு சீறின.

© KTBS
NOT TO BE REPUBLISHED



சண்டை போட்ட பூனைகள்
கண்கள் திறந்து பார்க்கையில்
விரட்டி அவற்றை அடித்தனர்
வீட்டு உரிமையாளர்கள்.

ஒன்றுபட்டு இரையினைத்
தின்ன மறந்த பூனைகள்
நலிந்து பாவம் துடித்தன
நல்ல பாடம் படித்தன.

- பெ.வா. முனிரத்தினம்
(இனியவை இருபது)

**அருஞ்சொற்பொருள் :**

இரை = உணவு, பதுங்கி = ஒளிந்து, பங்கு = பாகம், உரக்க = பலமாக, விரட்டி = துரத்தி, நலிந்து = வருந்து, மொழிந்து = சொல்லி.

@KTBS NOT TO BE REPUBLISHED

## I. *விடையளிக்கவும் :*

*1.* இரையைப் பிடிக்க எவை சென்றன?

விடை..............................................................

..............................................................

*2.* இரண்டு பூனைக்குட்டிகள் எங்கு பதுங்கி இருந்தன ?

விடை..............................................................

..............................................................

*3.* பிடித்த எலியைப் பூனை எங்கு கொண்டு சென்றது ?

விடை..............................................................

..............................................................

*4.* தின்னப் போகும் நேரத்தில் எது வந்தது ?

விடை..............................................................

..............................................................

*5.* இரண்டும் என்ன செய்தன ?

விடை..............................................................

..............................................................

*6.* பூனைகளை யார் விரட்டினர் ?

விடை..............................................................

..............................................................

*7.* பூனைகள் ஏன் துடித்தன ?

விடை..............................................................

..............................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. இரண்டு பூனைக்குட்டிகள் ................ பிடிக்கச் சென்றன.
2. எங்கிருந்தோ ................. ஒன்று எம்பிக் குதித்து வந்தது.
3. தின்னப் போகும் சமயத்தில் ............ ............. வந்தது.
4. ஒன்றை ஒன்று கடித்துமே .............. சப்தம் செய்தன.
5. ஒன்றுபட்டு இரையினைத் ............. மறந்த பூனைகள் ............ பாவம் துடித்தன.

## III. பிரித்தெழுதுக :

1. பூனைக் குட்டிகள் = ...................
2. எங்கிருந்தோ = ...................
3. கட்டிப்புரண்டு = ...................
4. ஒன்றையொன்று = ...................

## IV. எதிர்ச் சொற்கள் தருக :

1. இருள் x ................
2. பதுங்கி x ................
3. உரக்க x ................
4. நலிந்து x ................
5. நல்ல x ................

NOT TO BE REPUBLISHED @KTBS

## V. கேட்டு எழுதுக :

1. இருண்ட அறை ஒன்றில் இரண்டும் பதுங்கி நின்றன.
2. எங்கிருந்தோ எலி ஒன்று எம்பிக் குதித்து வந்தது.
3. கண்கள் மூடி இரண்டுமே கட்டிப்புரண்டு சீறின.
4. ஒன்றுபட்டு இரையினைத் தின்ன மறந்த பூனைகள் நலிந்து பாவம் துடித்தன.

### கல்வி கரையில

*மாற்றங்களைக் கண்டு பிடியுங்கள் !*

முதல் படத்திற்கும், இரண்டாவது படத்திற்கும் குறைந்தபட்சம் **6** மாற்றங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடிக்கவும்.



@KTBS NOT TO BE REPUBLISHED

# 10. உழைப்பே உயர்வு

அர்ச்சுனாபுரம் என்பது ஒரு அழகிய கிராமம். அக்கிராமத்தில் மதுசந்திரன் என்னும் ஒரு செல்வந்தர் இருந்தார். அவரிடம் முருகன், கந்தன், முனியன் என மூன்று வேலைக்காரர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நாள்.

காட்சி 1

பாத்திரங்கள் : செல்வந்தர், வேலையாட்கள், முருகன், முனியன், கந்தன்.

செல்வந்தர் : நான் அயல் நாட்டுக்குப் பயணம் செய்ய இருக்கிறேன். என்னிடம் உள்ள பணத்தில் ஒரு பகுதியை உங்களிடம் கொடுத்து விட்டுச் செல்கிறேன்.

முருகன் முனியன் கந்தன்

மூவரும் சேர்ந்து : சரி ஐயா! அப்படியே செய்யுங்கள் !



©KTBS NOT TO BE REPUBLISHED

செல்வந்தர் : முருகா ! இதோ உனக்கு ஐம்பதாயிரம்

முருகன் : நன்றி, முதலாளி! நீங்கள் நீடு வாழ்வீர்.

(முருகன் மிக முகமலர்ச்சியுடன் வாங்கிக் கொள்ளுதல்)

செல்வந்தர் : முனியா ! இதோ உனக்கு முப்பதாயிரம், வாங்கிக்கொள்.

முனியன் : நன்றி ! ஐயா, இதைப் பத்திரமாகக் காத்து உங்களிடம் ஒப்படைப்பேன்.

செல்வந்தர் : கந்தா ! இந்தா, இருபதாயிரம் ரூபாய் வாங்கிக்கொள்.

கந்தன் : நல்லது, முதலாளி ! (அவர் பாதம் தொட்டு வாங்கிக் கொள்ளுதல்)

(செல்வந்தர் அன்றைக்கே அயல் நாட்டுக்கு பயணப்பட்டுச் சென்றார்.)

## காட்சி 2

(முருகன், கந்தன், முனியன் என்ற மூவரும் கலந்துரையாடித் திட்டமிட்டனர்.)

NOT TO BE REPUBLISHED @KTBS

முருகன் : நண்பர்களே! நம்முடைய முதலாளி நம் திறமையை எடைபோடவே இப்பணத்தை நமக்கு அளித்து இருக்கிறார்.

கந்தன் : நானும் அதையே தான் நினைக்கிறேன்.

முனியன் : இது நம்முடைய திறமைக்கு ஒரு சவால். அதோடு அவர் கொடுத்த பணத்தைப் நமக்கு பாதுகாக்கத் தெரிகிறதா ? என்று தேர்வு வைத்திருக்கிறார்.

முருகன் : பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டி அப்படியே திரும்ப ஒப்படைக்க அவர் நமக்கு கொடுக்க வில்லை ! எனவே நாம்....

முனியன் : நண்பர்களே ! நமது முதலாளி மிகவும் கடுமையானவர். பணத்தை நாம் முதலீடு செய்து தொலைத்து விட்டால், நம்மை கொன்றே போட்டு விடுவார்.

கந்தன் : உங்கள் திட்டம் எதுவாக இருந்தாலும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். என்னை விட்டு விடுங்கள். அது போதும் எனக்கு.

காட்சி 3

செல்வந்தர் ஒரு வருடம் கழித்து, தாய் நாட்டுக்குத் திரும்பி வந்து, தன் வேலைக்காரர்கள் மூவரையும் அழைத்துப் பேசினார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

© KTBS NOT TO BE REPUBLISHED

செல்வந்தர் : நீங்கள் எப்படி இருக்கிறீர்கள். உங்களுடைய வீட்டில் அனைவரும் நலமாக இருக்கிறார்களா ? ஊரில் ஏதாவது முக்கிய நிகழ்ச்சிகள் உண்டா ? ஆமாம் நான் அயல் நாட்டுக்குச் செல்லும் போது கொடுத்த பணத்தை என்ன செய்தீர்கள் ?

முருகன் : ஐயா ! தாங்கள் எனக்களித்த ஐம்பதாயிரத் தைக் கொண்டு நிலம் வாங்கி, கிணறு வெட்டி, திராட்சை கொடிகள் நட்டு, தினமும் அதைக்கவனித்து வந்தேன் விளைச்சல் நன்றாக இருந்தது. நிரம்ப இலாபத்தையும் கொடுத்தது.

செல்வந்தர் : அப்படியா ! மிக்க மகிழ்ச்சி உன்னுடைய உழைப்பாற்றலைப் பாராட்டுகிறேன்.

முருகன் : உங்களுடைய ஐம்பதாயிரத்தை இரண்டு மடங்கு ஆக்கினேன். ஐயா ! இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

செல்வந்தர் : நல்லது உத்தமனே ! நீ உண்மையாகச் செயல் பட்டாய், உன் இலாபத்தை நீயே வைத்துக்கொள்.

முனியன் : ஐயா தாங்கள் எனக்களித்த முப்பதாயிரத்தைக்கொண்டு ஆடுகள் வாங்கி வளர்த்தேன். அவை பலமடங்கு ஆகின. இதோ இந்தப்பணத்தை ஏற்றுக் கொள்ளுங்கள், ஐயா !

செல்வந்தர் : நல்லது முனியா ! கடுமையாக உழைத்தாய், இலாபத்தை நீயே வைத்துக் கொள்.

முனியன் : தங்களின் உதவியை எப்பொழுதும் மறக்க மாட்டேன்.

செல்வந்தர் : கந்தா ! நான் கொடுத்தப் பணத்தை நீ என்ன செய்தாய், சொல், பார்க்கலாம் ! ஏதாவது வியாபாரம் செய்தாயா ?

கந்தன் : ஐயா ! நான் என்ன முட்டாளா ? தாங்கள் எனக்களித்த இருபதாயிரத்தை இதோ இந்தப் பானையில் வைத்து, பத்திரமாகப் பூமியில் புதைத்து, இரவு பகலாகக் காவல் காத்து, அந்த பணத்தை அப்படியே கொண்டு வந்துள்ளேன்.

செல்வந்தர் : அட! அட! முட்டாளே ! நீ முயற்சி அற்றவன். சோம்பேறி, இனி என் முன்னால் நிற்காதே. ஓடிப் போய் விடு. கடவுள் உனக்குக் கொடுத்தத் திறமையையும் பயன் படுத்த

NOT TO BE REPUBLISHED @KTBS

வில்லை. நான் கொடுத்த பணத்தையும் பயன் படுத்தவில்லை. சோம்பலே நம்முடைய முதல் எதிரி. சோம்பலை ஒழித்துச் சுறுசுறுப்பாக இரு. நல்வாழ்வு கிட்டும்.

**படித்தறிக :**

நான் அயல் நாட்டுக்குப் பயணம் செய்ய இருக்கிறேன்.

முருகா ! இதோ உனக்கு ஐம்பதாயிரம்.

நம் திறமையை எடை போடவே நமக்கு இப்பணத்தை நமக்கு அளித்திருக்கிறார்.

நிலம் வாங்கி கிணறு வெட்டி திராட்சைக் கொடிகள் நட்டேன்.

உன்னுடைய உழைப்பாற்றலைப் பாராட்டுகிறேன்.

சோம்பலே நமது முதல் எதிரி. சோம்பலை ஒழித்தால் நன்கு வாழலாம்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

**கேட்டு எழுதுக.**

| | |
|---|---|
| அழகிய கிராமம் | திராட்சைக் கொடிகள் |
| அயல் நாடு | விளைச்சல் |
| முகமலர்ச்சி | உழைப்பாற்றல் |
| ஒப்படைப்பேன் | செயல்பட்டாய் |
| கலந்துரையாடி | பலமடங்கு |
| தேர்வு | பூமியில் புதைத்து |
| கடுமையானவர் | நல் வாழ்வு |

***அருஞ்சொற் பொருள் :***

*அயல் நாடு = வெளி நாடு, பத்திரமாக = பாதுகாப்பாக, பாதம் = காலடி, கலந்துரையாடி = கூடிப்பேசி, தேர்வு = சோதனை, விளைச்சல் = அதிகளவு விளைதல்*

## ***பயிற்சி***

**I. *வினாக்களுக்கு விடையளிக்கவும் :***

1. அழகிய கிராமத்தின் பெயர் யாது ?

விடை ............................................................................

............................................................................

2. செல்வந்தரிடம் வேலை செய்த வேலையாட்களின் பெயர்களை எழுதுக.

விடை............................................................................

............................................................................

3. செல்வந்தர் எங்கு செல்வதாக கூறினார் ?

விடை............................................................................

............................................................................

4. செல்வந்தர் அயல் நாடு செல்லும்போது, தன் வேலையாட்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்துச் சென்றார் ?

விடை ............................................................................

............................................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

5. முருகன் தனக்களிக்கப்பட்ட ஐம்பதாயிரத்தைக் கொண்டு என்ன செய்தான் ?

விடை.................................................................................

.................................................................................

6. முனியனுக்கு அளிக்கப்பட்ட பணத்தை என்ன செய்ததாகக் கூறினான் ?

விடை.................................................................................

.................................................................................

7. கந்தனை செல்வந்தர் ஏன் கோபித்துக் கொண்டார் ?

விடை.................................................................................

.................................................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. செல்வந்தரின் வேலையாட்களின் பெயர்கள் ............... ............... .................
2. நான் ................. நாட்டுக்குப் பயணம் செய்ய இருக்கிறேன்.
3. நன்றி முதலாளி நீங்கள் ..................
4. நமது முதலாளி மிகவும் .................
5. ஐம்பதாயிரத்தைக் கொண்டு நிலம் வாங்கி ............ ............. அதைக் கவனித்து வந்தேன்.
6. முப்பதாயிரத்தில் ............... வாங்கி வளர்த்தேன்.
7. அட, அட ............... நீ முயற்சி அற்றவன்.

## III. பிரித்தெழுதுக :

1. முகமலர்ச்சி = ..................
2. முப்பதாயிரம் = ..................
3. கலந்துரையாடி = ..................
4. கடுமையானவர் = ..................
5. உழைப்பாற்றல் = ..................

## IV. சேர்த்தெழுதுக :

1. ஐம்பது + ஆயிரம் = ..................
2. பல + மடங்கு = ..................
3. எனக்கு + அளித்த = ..................
4. முயற்சி + அற்றவன் = ..................
5. இருபது + ஆயிரம் = ..................

## V. பொருத்தி எழுதுக :

| | அ | ஆ |
|---|---|---|
| 1. | அர்ச்சுனா புரம் | அயல்நாடு |
| 2. | செல்வந்தர் | ஐம்பதாயிரம் |
| 3. | முருகன் | ஆடுகள் |
| 4. | முனியன் | பூமியில் புதைத்தான் |
| 5. | கந்தன் | அழகிய கிராமம் |

@KTBS
NOT TO BE REPUBLISHED

## VI. புதிய சொற்களை உருவாக்குவோம் :

வேலையாட்கள்

எ-டு வேலை ; ஆட்கள் ;

வளர்த்தேன் ............ ..............

புதையல் ................ ..............

திறமையை ................ .................

கப்பல் ................ ................

## VII. சொற்களை இணைத்துத் தொடர் உருவாக்குக :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | செல்வந்தர் | அயல் நாடு | பயணம் | |

(எ-டு) செல்வந்தர் அயல் நாட்டுக்கு பயணப்பட்டார்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | நிலம் | கிணறு | திராட்சை | விளைச்சல் |
| 3. | நல்லது | உண்மை | செயல்பட்டாய் | |
| 4. | ஆடுகள் | வளர்த்தேன் | பலமடங்கு | |
| 5. | பானையில் | பத்திரமாக | காவல்காத்தேன் | |
| 6. | சோம்பல் | ஒழிந்து | சுறுசுறுப்பாக | |

NOT TO BE REPUBLISHED ©KTBS

## VIII. *சொன்னது யார் ?*

1. நான் அயல் நாட்டுக்குப் பயணம் செய்ய இருக்கிறேன்.

   ..........................................................................

2. நண்பர்களே ! நம்முடைய முதலாளி நம் திறமையை எடை போடவே பணத்தை நமக்கு அளித்துள்ளார்.

   ..........................................................................

3. நமது முதலாளி மிகவும் கடுமையானவர்.

   ..........................................................................

4. உன்னுடைய உழைப்பாற்றலைப் பாராட்டுகிறேன்.

   ..........................................................................

5. முப்பதாயிரத்தைக் கொண்டு ஆடுகள் வாங்கி வளர்த்தேன்.

   ..........................................................................

6. அட! அட! முட்டாளே! நீ முயற்சி அற்றவன் சோம்பேறி.

   ..........................................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

### *பாடலைப் பாடி மகிழ்க :*

ஒளிப டைத்த கண்ணினாய் வா! வா! வா!
உறுதிகொண்ட நெஞ் சினாய் வா! வா! வா!
களிப டைத்த மொழியினாய் வா! வா! வா!
கடுமை கொண்ட தோளினாய் வா! வா! வா!
தெளிவு பெற்ற மதியினாய் வா! வா! வா!

சிறுமை கண்டு பொங்குவாய் வா! வா! வா!
எளிமை கண்டு இரங்குவாய் வா! வா! வா!
ஏறுபோல் நடையினாய் வா! வா! வா!

***செயல்திறன் :***

செய்தித் தாள்களிலும், சிறுவர்களுக்கான வெளியீடுகளிலும் வரும் செய்திகளைப் படித்தறிக

பொது இடங்களில் ஒட்டப்பட்ட வண்ணச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள், விளம்பரங்கள், சாலையின் பெயர்கள் போன்றவற்றைப் படிக்க.

வாரப்பத்திரிக்கைகளில் வரும் புதிர்கள், விடுகதைகள் ஆகியவற்றைப் படித்து விடையறிக.

திருமண விழா, அழைப்பிதழ், பள்ளி ஆண்டு விழா அழைப்பிதழ்களை படித்தறிக.

@KTBS NOT TO BE REPUBLISHED

***பொருத்தமான சொல் அட்டைகளை இணைத்து தொடர் உருவாக்கி எழுதுக :***

| | | |
|---|---|---|
| கிளி | பள்ளி | விளையாடினர் |
| அமுதா | பறந்து | ஏறின |
| அணில் | மரத்தில் | சென்றாள் |
| ஆடுகள் | பந்து | சென்றது |
| சிறுமியர் | மலையில் | ஏறியது |

எடுத்துக்காட்டு :

1. கிளி பறந்து சென்றது.
2. ..............................................
3. ..............................................
4. ..............................................
5 ..............................................
6. ..............................................

**இறால் என்ற மீனுக்கு அதன் இதயம் தலையில் இருக்கிறது.**

**எலும்பை சுவைக்க, எலும்பு உள்ள இடத்திற்கு போக நாய்க்கு வழிகாட்டுங்கள்.**



©KTBS NOT TO BE REPUBLISHED

இவர்கள் யார் ? என்ன செய்கிறார்கள்.

.................................... ....................................

.................................... ....................................

@KTBS
NOT TO BE REPUBLISHED

.................................... ....................................

.................................... ....................................

© KTBS Not to be republished

கோபம்
1
அரசர் மகேந்திரன், தன் மகன் அறிவுமதியை நல்ல குருகுலத்தில் சேர்க்க எண்ணி, அமைச்சருடன் ஆலோசனை செய்தார்.
அரசே, இளவரசரை மகான் சுகதேவிடம் அனுப்பி வைப்போம்.
அவர் மிகவும் கோபக் காரராச்சே... அவரிடம் எப்படி இளவரசரை அனுப்புவது?
இருக்கட்டுமே! நம் இளவரசர் வயதில் சிறியவர் என்றாலும், புத்திசாலியானவர். சுகதேவ் ஆடம்பரத்தை விரும்ப மாட் டார். எனவே, இளவரசருக்கு சாதாரண உடைகளை அணி வித்து, ஒரு வீரனின் துணை யுடன் அனுப்பி வைப்போம்.
அமைச்சரின் யோசனையை அரசர் ஏற்றுக் கொண்டார்.
சரி அமைச்சரே, நல்ல நாளாகப் பார்த்து இளவரசரை அனுப்பி வையுங்கள்.
குறிப்பிட்ட நாளில் ஒரு வீரனின் துணை யுடன் மகான் சுகதேவைச் சந்தித்தான் இளவரசன். அப்போது அவர் ஏதோ கோபத்தில் இருந்தார்.
மகானே, தங்களை வணங்குகிறேன்.

இங்கே பாரப்பா, நீ நாடாளும் அரசனின் மகன் என்பதற்காக எந்தவித சலுகையும் காட்ட மாட்டேன். நான் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். என்ன புரிந்ததா?
என்னிடம் தீயா? என்ன உளறுகிறாய்?
மகானே, தயவுசெய்து தீயை அணைத்து விடுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது.
புரிந்து கொண்டேன் மகானே ! தங்களிடம் இருந்து புகையும் வாசனை வருகிறது. சீக்கிரம் தீயை அணைத்து விடுங்கள்.
இளவரசன் ஏறுக்குமாறாகப் பேசியதும், மகானின் கோபம் அதிகரித்தது.
ஏய்... முட்டாளே, உனக்கு கண் தெரியாதா? என்னிடம் எங்கே தீ இருக்கிறது? மரியாதையாக இங்கிருந்து ஓடிப்போய் விடு.
மகானே ! உங்கள் பேச்சில் எப்படி அனல் பறக்குது பார்த்தீர்களா? உங்களிடம் இருக்கும் தீயின் வேகம் குறையவில்லையே... அதனால் தான் தீயை அணைக்குமாறு கூறினேன். இது தவறா?
அதிர்ந்து போனார் மகான். இளவரசன் 'தீ' என்று சொன்னது, தன்னிடம் இருக்கும் கோபத்தை தான் என்று புரிந்து கொண்டார். அவருடைய மனதில் அமைதி குடிபுகுந்தது.
இளவரசே ! உண்மையைப் புரிந்து கொண்டேன். இனி நான் எப்போதும் கோபப்பட மாட்டேன். நீங்கள் என் மாணவனாகக் கிடைத்தது நான் செய்த புண்ணியம்.
அதைப் பார்த்துக் கொண்டிருந்த காவல் வீரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

நன்றி : தினத்தந்தி

# *11. வானூர்தி*

வான ஊர்தி வான ஊர்தி
எங்கே போகின்றாய் ? - நான்
வாடிக்கையாய்ப் போவதே
இலங்கை மாநகரே.

பானை ஒன்று குறுக்கில் கண்டால்
என்ன செய்குவாய் ? - "அட
பானை ஏது? சட்டி ஏது?
வான வெளியிலே."

ஆனை ஒன்று குறுக்கில் வந்தால்
என்ன செய்குவாய் ? - "அட
ஆனை ஏது பூனைஏது
வான வெளியிலே?"

கானலுக்கு இளைப்பாற
எங்கே தங்குவாய் ? - "நான்
போனவுடன் கீழிறங்கி
பொழுது போக்குவேன்."

எத்தனைபேர் இருக்கின்றார்கள்
வானவூர்தியே ? - "ஆம்
எழுபதுபேர் இருக்கின்றார்கள்
என் வயிற்றிலே!"

மெத்த உயரத்தேயிருந்து
விழுந்திடுவாயோ ? - "என்
மேல் இருக்கும் பொறிகெட்டால்
விழுந்திடுவேனே"

NOT TO BE REPUBLISHED @KTBS

மொய்த்துப் புயல் வந்து விட்டால்
என்ன செய்குவாய் ? - "அந்த
மொய்த்தப் புயல் தாண்டுவது
ஓட்டுநர் திறம்."

- பாவேந்தர் பாரதிதாசன்

திறன் : கேட்டல் : படித்துப்புரிந்து கொள்ளுதல்.

**படித்தறிக :**

இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்
சிறப்புப்பெயர் : பாரதிதாசன்
பெற்றோர் : கனகசபை, இலக்குமி
பிறப்பிடம் : புதுவை
தோற்றம் : **29.04.1891**
மறைவு : **21.04.1964**

NOT TO BE REPUBLISHED ©KTBS

**சொல் விளையாட்டு**

மூன்றெழுத்து வார்த்தையிலே
முதலிரண்டை விலக்கிவிட்டால்
உடலுறுப்பில் ஒன்றுவரும்
உழைப்பதற்கு உதவி செய்ய
நடு எழுத்தை வெட்டி விட்டால்
நட்புக்கு எதிர்ப்பு வரும்.
இறுதியதை எடுத்துவிட்டால்
'எண்' அதனில் பின்னாகும்
அம் மூன்று ஒன்று சேரின்
அதன் மீது எழுதிடலாம்.
உட்காரப் பயன் படவும்
உதவிடுமே அவ்வார்த்தை
இருவேறுபலன் கொடுக்கும்
இந்த வார்த்தை என்ன ?

விடை : பலகை

***நாங்கள் யார் ?***

ஓடியாடி உழைப்பதில்லை
வேறு
ஓரிடமும் போவதில்லை
ஆனால்
உணவை நாங்கள் சமைத்திடுவோம்.
உலகிற்கும் கொடுத்திடுவோம்.
நாங்கள் யார் ?

விடை : தாவரங்கள்

***(சிறு துளி பெருவெள்ளம்)***

**சோலையில் பலவித பறவைகள் சுற்றித் திரிகின்றன மொத்தம் எத்தனைப் பறவைகள் ?**



***விடை***

................

@KTBS NOT TO BE REPUBLISHED

## 12. திரிபதிய திரிவிக்ரமன் சர்வக்ஞர்

A6H7N1



கருநாடக மாநிலத்திலுள்ள தார்வார் மாவட்டத்தில் "மாசூரு" என்ற ஒரு சிறிய கிராமம். அவ்வூரில் உள்ள கோயிலில் பூசை செய்வதைத் தொழிலாகக் கொண்டவர் பசவரசா. அவருடைய மனைவியின் பெயர் மல்லவ்வா. இவர்களுக்கு நெடுங்காலம் குழந்தைப் பேறு இல்லை. காசி விசுவநாதனின் அருளால் சர்வக்ஞர் மகனாகப் பிறந்தார். அவர் "சிவனும் பார்வதியும்" எனது பெற்றோர், புட்டதத்தன் என்னும் பெயரில் கைலாயத்தில் இருந்தவன் நான், ஒரு காரணத்தால் சிவன் என்னை பூமிக்கு அனுப்பினார்" என்று கூறியுள்ளார்.

இவர் இளம் வயதிலேயே வீட்டிலிருந்து வெளியேறினார், துறவறம் மேற்கொண்ட சர்வக்ஞர் சாதி, சமயம், மூடநம்பிக்கைகள் முதலியவற்றை எதிர்த்தார். வாழும் நிலமும், அருந்தும் நீரும், தீயும், வானத்தில் ஒளிவிடும் சூரியனும் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவானவை, பல குழுக்களும், பாழ் செய்யும் சாதிகளும் எதற்கு ? என்று சாதியை எதிர்த்துக் குரல் எழுப்பினார்.

"ஒரு விலங்கின் மாமிசத்தை உண்பவனைவிட, தெய்வத்தின் பெயரால் விலங்கைப் பலியிட்டு அதனை உண்பவனே மோசமான தீண்டத்தகாதவன்." என்று கூறியுள்ளார்.

அவர் தம் பாடலின் இறுதி அடியில் "சர்வக்ஞ" (எல்லாம் வல்ல இறைவா) என்று முடிக்கிறார்.

சர்வக்ஞர் பாடிய பாடல்கள் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்துள்ளன. அவற்றை உலகியல், அறக் கோட்பாடு, ஆன்மீகம் என்ற அடிப்படையில் பகுத்து 34 துணைப் பிரிவுகளின் கீழ் வரிசைப்படுத்தியுள்ளார்.

சர்வக்ஞரின் மூன்று அடிக் கவிதைகளைக் கன்னடத்தில் "திரிபதி" என்று குறிப்பிடுகிறார்கள். எனவே இவர் "திரிபதிய திரிவிக்ரமன்" என்று சிறப்புப் பெயர் பெற்றார். பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் உயர்ந்த கருத்துக்களை எளிய நடையில் தந்துள்ளார். தமிழில் திருவள்ளுவரைப் போலவும், தெலுங்கில் வேமண்ணாவைப் போலவும் கன்னடத்தில் சர்வக்ஞர் விளங்குகிறார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**'மூடர்'**

வான் மழை பொழியினும் கற்பாறையது
வான் மழையை உட்கொள்ளுமோ மூடருக்கும்
வீணாம் உரைப்பது பல சர்வக்ஞ

**அருஞ்சொற்பொருள் :**

பேறு - செல்வம்

முக்தி - வீடுபேறு

பரிதி - சூரியன்

திரிபதி - மூன்று அடிக் கவிதை

பக்தி - தெய்வப்பற்று

## *பயிற்சி*

**I. *பிரித்தெழுதுக :***

நெடுங்காலம் =

குழந்தைப் பேறு =

வாழுமிடம் =

உலகிலுள்ள =

கீழில்லை =

**II. *சேர்த்து எழுதுக :***

துறவு + அறம் =

குழந்தை + பேறு =

வெளி + ஏறினார் =

அ + ஊரில் =

**III. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

1. சர்வக்ஞர் கைலாயத்தில் ................. என்ற பெயரில் இருந்தேன் என்று கூறினார்.

2. இவர் .................. வயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறினார்.

3. "சர்வக்ஞ" என்ற சொல்லின் பொருள் ...............

4. சர்வக்ஞரின் மூன்று அடிக் கவிதைகளை கன்னடத்தில் ................ என்று குறிப்பிடுகிறார்கள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**IV. *பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :***

*1.* சர்வக்ஞரின் பெற்றோர் யாவர் ?

..........................................................................

..........................................................................

*2.* அனைத்து மக்களுக்கும் பொதுவானவை எவை?

..........................................................................

..........................................................................

*3.* சர்வக்ஞர் தீண்டாமையை எதிர்த்துக்கூறியுள்ளவை யாவை ?

..........................................................................

..........................................................................

*4.* சர்வக்ஞர் பாடிய பாடல்களின் மூன்று பெரும் பிரிவுகள் எவை ?

..........................................................................

..........................................................................

*5.* சர்வக்ஞரின் சிறப்புப் பெயர் என்ன ? அவ்வாறு ஏன் அழைக்கப்படுகிறார் ?

..........................................................................

..........................................................................

@KTBS NOT TO BE REPUBLISHED

6. சர்வக்ஞர் பாடலின் இறுதி அடியை எவ்வாறு முடிக்கிறார் ?

..........................................................................

..........................................................................

**V. விடுபட்ட எழுத்துக்களை எழுதுக :**

| | | |
|---|---|---|
| | சூ | ரு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தி | ரு | | | ளு | | ர் |

| | | | |
|---|---|---|---|
| தி | | ப | தி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பு | | ட | த | | த | ன் |

| | | | | |
|---|---|---|---|---|
| ப | ச | | ர | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | | வ | க் | | ர் |

**VI. குழுவில் சேராததைக் கோடிட்டுக் காட்டுக :**

1. பாரதியார், பாரதிதாசன், காமராசர், கண்ணதாசன்.
2. தஞ்சாவூர், மைசூர், பாதாமி, ஹம்பி.
3. பெங்களூர், சென்னை, திருவனந்தபுரம், ஆந்திரா.
4. காந்தியடிகள், கன்னடம், தமிழ், தெலுங்கு.
5. திருவள்ளுவர், வேமண்ணா, சர்வக்ஞர், அப்துல்கலாம்.

***அறிந்து கொள்க :***

***சான்றோர் வாழுமிடமே புனிதம்***

தவளை, மீன்கள் உறையும் நீரும் புனிதமோ ?
நவிலும் சான்றோர் வாழுமிடமே புனிதமாம்.
கவளமுண்ண நெய் நன்றாதார் போல் சர்வக்ஞ

NOT TO BE REPUBLISHED @KTBS

## அறிவே சிறந்தது

அறிவினும் பெரிதில்லை தாயினும் கீழில்லை.
பரிதியின் ஒளிக்கு நிகரில்லை உலகில்
அறிவே உயர்வாம் சர்வக்ஞ.

**திரு இல்லா வித்தை பயன் இல்லை.**

## விடுகதைகள்

1. சேதிவரும் பின்னே, மணியோசை வரும் முன்னே அது - என்ன ?
2. சிறகில்லாமல் பறந்துவரும், வீடு புகுந்து சேதி தரும் - அது என்ன ?
3. வயிற்றில் நெருப்பை சுமக்கின்றான், வயிற்றுக்கு சோற்றை சமைக்கின்றான் - அவன் யார் ?
4. அள்ளிக் குடித்தால் தாகம் தீர்ப்பேன், ஆழம் வந்தால் தத்தளிக்கவைப்பேன் - நான் யார் ?
5. ஒற்றைக் காலனுக்கு முன்னூறு பல்வரிசை - அவன் யார்?
6. முடியுடன் இருந்தால் கண்ணில்லை, மொட்டையடித்தால் மூன்று கண் - அதுயார் ?
7. கடிக்கத் தெரியாதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் - அவன் யார் ?
8. தரையில் இருப்பான், தண்ணீரில் மிதப்பான் - அவன் யார் ?
9. சிவப்பாய் இருப்பான், தெருவில் நிற்பான், திறந்தவாய் மூட மாட்டான் - அவன் யார் ?
10. காதைத் திருகினால் கதைசொல்வான் - அவன் யார் ?

விடை : 1) தொலைபேசி, 2) தபால் 3) அடுப்பு, 4) தண்ணீர், 5) மக்காச் சோளம் 6) தேங்காய் 7) சீப்பு, 8) படகு, 9) தபால் பெட்டி 10) ரேடியோ.

©KTBS NOT TO BE REPUBLISHED

@KTBS
NOT TO BE REPUBLISHED

# NOTE

@KTBS
NOT TO BE REPUBLISHED